மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மணி 4 | 15 - 3 - 56 | இதழ் 22



அறிவியல் வல்லுநர்

ஜோசப் பிரீஸ்ட்லி

★

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

புரட்சிக் கவிஞருக்குப்

பொன்னுடை போர்த்திய விழா

இற்றைக் காலத் தமிழக வரலாற்றில், பொன்னுடை போர்த்தும் விழாக்கள் பலப்பல நடைபெற்று வருகின்றன. அவற்றில் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் மிக எழிலுடையதாகவும் பெருமைமிக்கதாகவும், முதன்மை வாய்ந்ததாகவும் முக்கியம் பொருந்தியதாகவும், எல்லோராலும் ஆதரிக்கப்பட்டதாகவும் எல்லாக் கட்சிகளாலும் போற்றப்பட்டதாகவும் அமைந்த ஒரு பெரும் விழா புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திய விழாவேயாகும். அது 1946-ஆம் ஆண்டில் நடைபெற்றது. அந்த விழாவினை வெற்றிகரமாக்க முன்னின்று முயன்ற பெருமையெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களையே சாரும்.

அந்தப் பொன்னுடை போர்த்திய விழாவின்போது, இற்றைக் காலத் தமிழ்ப் புலவர் வேறு யாருக்கும் அளிக்காத வகையில் புரட்சிக் கவிஞர் அவர்களுக்குப் பெரும் பொற்கிழி (பண முடிப்பு) ஒன்றும் அறிஞர் அண்ணா அவர்களின் பெரு முயற்சியால் அளிக்கப்பட்டது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்ப்பேராசிரியர் வேலையினின்றும் இளைப்பாறிப், பொதுப்பணியில் நேரடியாக இறங்கிய காலையில், அவருக்குப் பொற்கிழி வழங்க வேண்டும் என்ற எண்ணம் நண்பர்கள் சிலர்க்கு ஏற்பட்டது. நிதி திரட்டும் முயற்சியில் தோழர்கள் கிருட்டினராசு, செல்லப்பர், டி, என். இராமன், ப. கண்ணன் ஆகியோர் தீவிர பங்கு கொண்டனர். 1945-ஆம் ஆண்டில் திருச்சியில் கூடிய திராவிடக்கழக மாநாட்டில் அந்த முயற்சிக்கு ஆதரவு தரும்வகையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. எனினும் நிதி திரட்டும் முயற்சி பாராட்டத் தக்க வகையில் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. பிறகு நிதிக்குழுவினர் அறிஞர் அண்ணா அவர்களின் முழு ஆதரவையும், முழு ஒத்துழைப்பையும் நாடினர். அறிஞர் அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்குச் செய்திடும் சிறப்பு தமிழுக்கு—தமிழகத்திற்கு—திராவிடத்திற்கு—திராவிட இயக்கத்துக்குச் செய்திடும் சிறப்பு என்று கருதி முழுமூச்சோடு பணியாற்றத்தொடங்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் புரட்சிக்கவிஞருக்கு நிதி சேர்த்திடும் பணியில் இறங்கியிருந்தது பெரியார் இராமசாமி அவர்களுக்கு விருப்பமில்லை. அந்த முயற்சியையே வெறுத்தார். அதனால் அண்ணா அவர்களையும் வெறுக்கத் தலைப்பட்டார். பெரியாரின் சினம் மூண்டு எழுந்தாலும், சீரிய பணியினைச்செய்கிறோம்—கடமையைச் செய்கிறோம் என்ற உணர்வில் அறிஞர் அண்ணா பெரியாரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பணியாற்றினார்கள். பெரியார் அவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் மாறுபாடு ஏற்படக் காரணமாக இருந்தவைகளில் புரட்சிக் கவிஞருக்கு நிதிசேர்த்த முயற்சியும் முக்கியமான ஒன்றாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் சில தினங்களுக்குள் ஏறத்தாழ இருபத்தினான்கு ஆயிர ரூபாய் சேர்த்துப் பொன்னுடை போர்த்தும் விழாவையும், பண முடிப்பு அளித்தலையும் செய்தார்கள். விழா காங்கிரசு, கம்யூனிசுட்டு, சோசியலிசுட்டு, நீதிக்கட்சி, திராவிடக்கழகம் ஆகிய பல்வேறு கட்சிகளின் ஆதரவில், பல்வேறு கட்சிக் கொடிகளுடன், சென்னைப் பச்சையப்பன் பள்ளி விளையாட்டுத் திடலில், ஒளி விளக்குகளால் அழகுபடுத்தப்பட்ட கவர்ச்சிகரமான மேடையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நாவலர் பாரதியார் அவர்கள் புரட்சிக் கவிஞருக்குப் பொன்னுடை போர்த்தினார். அறிஞர் அண்ணா அவர்கள் கவிஞருக்குப் பொற்கிழி அளித்தார்கள். தமிழகத்தின் தலைசிறந்த எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சொற்பொழிவாளர்கள் அத்துணைப் பேரும் கலந்துகொண்டு புரட்சிக் கவிஞரைப் பாராட்டினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வெற்றிகரமாக்கிய குறிப்பிடத்தக்க பணிகளில், புரட்சிக்கவிஞருக்குப் பொன்னுடை போர்த்திய விழாவும் ஒன்றாகும்.

1023

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 3 - 56 வியாழக்கிழமை

வரியோ வரி!

ஜனவரி போய் பிப்ரவரி வந்தவுடன் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் போடப் போகும் புதிய வரிகள் என்ன என்று ஏக்கத்தோடும் எரிச்சலோடும் எதிர்பார்க்க வேண்டியது மக்களின் ஆண்டுக் கடமைகளில் ஒன்று ஆகிவிட்டது.

வந்து சேரும் வழிகளில் ஜனவரி. பிப்ரவரி ஆகிய இரண்டு வரிகள் மட்டுந்தான் பணம் செலுத்த வேண்டாத வரிகளாக இருக்கின்றன. மற்ற வரிகளெல்லாம் பொது மக்களை நாளுக்குநாள் கசக்கிப் பிழியும் வரிகளாகவே அமைந்திருக்கின்றன.

"நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறினால் நாட்டில் வரிப்பளு குறையும்; வளம் பெருகும்; வாழ்வு மலரும்" என்று முன்பு காங்கிரசுக்காரர்கள் சந்துமுனைகளிலெல்லாம்கூட சிந்து பாடித் திரிந்தனர். அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறியவுடன் "வெள்ளையர் ஆட்சி எவ்வளவோ மேலான ஆட்சி" என்ற நற்பெயரை வெள்ளையர்க்கு வாங்கித் தந்துவிட்டனர். காங்கிரசுக்காரர்கள் ஆட்சிப் பீடத்திற்கு ஏறியதற்குப் பிறகு ஆண்டுக்கு ஆண்டு "வரிப்பளு ஏறுகிறது; வளம் குறைகிறது: வாழ்வு மங்குகிறது" என்று கூறிடும் நிலைதான் ஏற்பட்டுள்ளது.

புதிதாக விதிக்கப்படும் வரிகளெல்லாம் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று அரசியலாரால் சொல்லப்படுகின்றது. அபிவிருத்திக்குச் செலவழிக்கப்படும் பொருளைக் காட்டிலும், அபிவிருத்தியின் பெயரால் நடைபெறும் ஊழல்களுக்கு விரயம் ஆக்கப்படும் பொருள்தான் ஏராளமாக இருக்கின்றது. அந்த அபிவிருத்தியும் வடநாட்டில்தான் ஏற்படுத்தப்படுகிறதே யல்லாமல், தென்னாட்டில்—திராவிட நாட்டில் ஏற்படுத்தப்படுவதில்லை. திராவிடத்தின் வளங்களும், வரிகளும் வடநாட்டவரின் வாழ்வுக்குத்தான் இதுவரையில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. தென்னாட்டுச் சர்க்கார்கள் வடநாட்டு மத்திய அரசாங்கத்தின் எடுபிடியாகத்தான் இருந்து வருகின்றனவேயல்லாமல், விரும்பியவாறு நடக்கும் சுதந்திர வீரர்களாகக் காட்சி யளிக்க முடியவில்லை.

சென்னை அரசாங்கம் புதிய ஆண்டின் 'பரிசு'களாக விதித்திருக்கும் முக்கியமான வரிகள்: **(1) டீசல் எண்ணெய் மீது காலனுக்கு 2½ அணு மிகவான வரி. (2) மின்சார விசை வினியோகக் கட்டணம் 30 சதவிகிதம் உயரும் (3) இனும் நிலங்கள் மீது ரயத்துவாரி விகிதப்படி வரி. (4) சர்க்கரை மீது ஏதாவது ஒரு கட்டத்தில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் மேற்கொண்டு விற்பனை வரி,**

முதல் இரண்டு வரிகள் விவசாய அபிவிருத்தியையும், தொழிலபிவிருத்தியையும் மிகவாகப் பாதிக்கும். நான்காவது வரி பொது மக்கள் எல்லோரையும் பொதுவாகப் பாதிக்கும். எல்லா வகைகளிலும் ஏழை எளிய உழவர்கள் மீது வரிச்சுமை ஆண்டுக்கு ஆண்டு ஏறிக்கொண்டே இருப்பது இரங்கத் தக்கதாக இருக்கிறது. உழவர் வாழ்வு மலர்வது முயற்கொம்போ என்று எண்ணி ஏங்க வேண்டியிருக்கிறது.

மத்திய அரசாங்கம் 'பரிசு'களாகத் தந்துள்ள முக்கிய புதிய வரிகள்: **(1) தந்திக்கு ஒரு அணுவும், பதிவு அஞ்சலுக்கு இரண்டு அணுவும் கட்டணம் அதிகரிக்கும். (2) முரட்டு ஏக வேட்டி, புடவை நீங்கலாக மற்றெல்லா ரகத் துணிகளுக்கும் கெசத்திற்கு அரையணு மிக வரி. (3) சோப்பு, அட்டை, செயற்கைப் பட்டுத் துணி, எக்சயிசு வரி சற்றுகூடும் (4) பதிவு செய்யப்பட்ட கூட்டுக் கம்பெனிகளுக்குப் புதுவரி (5) ஆறு சதவிகிதத்திற்கு அதிகமான லாபப் பங்குக்கு அதிகப்படி வரி உயர்வு (6) போனசு பங்குகளுக்குப் புதிய வரி (7) சிலவகை எண்ணெய்களுக்குப் புதிய வரி.**

இந்த வரிகளெல்லாம் நேரிடையாகவும், மறைமுகமாகவும், இறுதியில் ஏழை எளிய பொதுமக்களைத் தாக்குவதாகத்தானிருக்கின்றன.

அரசாங்கம் தன்னுடைய தொழிலையும், வருமானத்தையும் பெருக்கிக்கொண்டு, அவற்றின் மூலம் மக்களைக் காப்பாற்ற முன் வருவதற்கான வழி வகைகளைத் தேடாது; மக்களின் மீது ஆண்டுக்கு ஆண்டு வரிகள் விதித்து அவற்றைக் கொண்டு வாழும் பிற

போக்கான நிலையில்தான் இன்னமும் இருந்து வருகிறது.

திராவிடத்தைப் பொறுத்தவரையில், திராவிடம் மாநில அரசாங்கங்களுக்கும், அதிகப்படியான அளவு மத்திய அரசாங்கத்துக்கும் வரிப் பணங்களை வாரிவாரிக் கொடுத்துவிட்டு, பலனேதும் காணுமல் வறுமையில் உழன்று வரவரத் தேய்ந்து கொண்டே போகும் தன்மையில்தான் இருந்து வருகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டமும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் சரி, ஆண்டுக்கு ஆண்டு போடும் மத்திய அரசாங்கவரவு—செலவுத் திட்டங்களும் சரி வடக்கு வளரவும்--தெற்குத் தேயவும் ஆன நிலைமையை உண்டாக்குவனவாகத்தான் இருந்து வருகின்றன.

திராவிடத்தின் வளங்கள் திராவிடத்திற்கே பயன்படவும், திராவிடம் வளரவும், வாழவும், திராவிடத்தில் வளம் பொங்கவும், வரிச்சுமை குறையவும், திராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், வாழ்வில் மகிழ்ச்சி பொங்கவும் வேண்டுமானல், அதற்கான ஒரே வழி திராவிடத்தைத் திராவிடர்க்கு ஆக்குவதுதான். இல்லையானல் வடவர்கள் "வளமோ வளம்!" என்று மகிழ்ச்சிக் குரல் எழுப்பிக்கொண்டே இருக்க, திராவிடர்களாகிய நாம் "வரியோ வரி!" என்று கதறிக் கொண்டிருக்க வேண்டிதான் வரும், இனியாவது திராவிடத்தின் விடுதலை' திராவிடரின் உயிர்க்குறிக்கோளாக இலங்கட்டும்!

கலைக் கோயில்

ஆசிரியர் : ரவி

தித்திக்கும் முத்தமிழை எத்திக்கும் எதிரொலிக்கத் திங்கள் இருமுறை வெளிவரும் கலை இலக்கிய ஏடு. சித்திரைத் திங்கள் முதல் நாள் வெளிவர இருக்கிறது.

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கலைக் கோயில்

27, சப்பாணி கோயில் தெரு,

வடக்குமாசி வீதி, மதுரை.

கருத்துக் கதிர்

தவருகப் பேசுகிறர்!

"கடவுளை மறந்துவிடலாம் என்று சிலர் நினைக்கிறர்கள். பரஸ்பர அன்புக்கு அவசியமே இல்லை என்றும், அதற்குப் பதில் துவேஷத்தை வளர்க்கலாம் என்றும் அவர்கள்கருதுகிறர்கள். இத்தகைய போக்கு முற்றிலும் பிசகானது" என்று தோழர் சி. இராசகோபாலாச்சாரியார் 24-2-56இல் சென்னைக் காந்தி மண்டபத்தில் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசும்போது, பகுத்தறிவாளர்களை நினைவில் வைத்துக்கொண்டு குறிப்பிட்டுள்ளார்.

அன்பர் ஆச்சாரியார் தவருகக் கருதிக் கொண்டு தவருகப்பேசுகிறர். பகுத்தறிவாளர்கள் "கடவுளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்; பரஸ்பர அன்பைச்செலுத்துங்கள்; துவேஷத்தை அகற்றுங்கள்" என்றுதான கூறிவருகிறர்கள்' அவர்கள் காரண காரிய விளக்கமின்றி ஏதொன்றையும் விரும்பச் சொல்லுவதுமில்லை, வெறுக்கச்சொல்லுவதுமில்லை. காரண காரிய விளக்கத்தோடு அநீதியான முறைகளை வெறுக்கக் கூறினல், துவேஷத்தை வளர்ப்பது ஆகும் என்று அன்பர் ஆச்சாரியார் கருதுவாரேயானல் அது அவருடைய தவறேயாகும். 'அறிவுக் கடவுள் வாழட்டும்' அன்புச் சமயம் தழைக்கட்டும்' என்றுதான் பகுத்தறிவியக்கத்தினர் கூறிவருகின்றனர்.

* * *

திராவிடநாட்டுப் பிரிவினையே ஏற்றவழி

',தென்னட்டின் பொருளாதார அபிவிருத்திக்கெனவே இணைப்பு யோசனை உருவாகியது......ஆங்கிலத்துடன்கூடப் பிரதேச மொழியை நிருவாக மொழியாகக் கொள்ளலாம். பொது அரசாங்கத் துறையில் ஆங்கிலத்துடன் பிரதேச மொழிகளை அரசாங்க மொழிகளாகக் கொள்ளலாம். ......இணைப்பினல் பொருளாதார அபிவிருத்திக்கான சாத்தியக் கூறுகளையே முக்கியமாகக் கருத வேண்டும். ......இணைப்புப் பகுதி கடல் வசதி

மிகுந்த நாடாகவும் இருக்கும். ஆழ்கடல் மீன் பிடிப்பு, கடலோர வாணிபப்பெருக்கு, பல துறைமுகங்கள் அபிவிருத்தி முதலியவற்றிற்கும் திட்டம் வகுக்கலாம். இந்த அனுகூலங்களால்தான் இணைப்பு யோசனை என் மனதைக் கவர்ந்தது" என்று சென்னை நிதியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் 26-2-56ஆம் நாள் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார். மேலும் தட்சிணப்பிரதேச அமைப்பை ஆதரிக்கும் பிறர், தமிழர்—ஆந்திரர்—கன்னடத்தார்—கேரளத்தார் ஆகிய நான்கு மொழி பேசும் மக்களிடத்தில் இனம்—மொழி—பண்பாடு— நாகரிகம்—வரலாறு—நிலத்தொடர்பு பற்றிய ஒற்றுமைப்பண்புகள் சிறந்து விளங்குகின்றன என்பதைச் சுட்டிக் காட்டிப், பொருளாதாரத் துறையில் அந்நான்கு பகுதிகளும் மேலோங்குவதற்கு வழி வகைகள் இருக்கின்றன என்றும் சொல்லி தட்சிணப்பிரதேசம் அமையவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர்.

தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களும், அவரைப்போன்ற பிறரும் கூறிடும் வசதிகளையும், வாய்ப்புகளையும், வழிகளையும் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் எதிர்பார்ப்பன போன்ற பலன்களை அடையவேண்டுமானால், அதற்கு ஏற்றவழி 'தட்சிணப்பிரதேசம்' என்ற இந்திய யூனியனுக்குள் அடங்கிய மாநில அமைப்பு அல்ல, இந்திய யூனியனை விட்டு விலகும் திராவிடநாட்டுப் பிரிவினையே யாகும்.

மொழி வளர்ச்சிக்கும், பாமரமக்களின் முன்னேற்றத்துக்கும், சனநாயக வெற்றிக்கும், நிர்வாக வசதிக்கும் தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கும் மொழி வழித் தனித்தனி மாநிலங்களாகப் பிரிய வேண்டியதும், அரசியல்—பொருளாதார ஏற்றம் பெற, அவை நான்கும் ஒன்றாக இணைத்த கூட்டாட்சி நாடாகியத் தனித் திராவிடநாடு அமையவேண்டியதும் இன்றியமையாதனவாகும் எண்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

* * *

காலங் கடந்த உபதேசம்!

"இனிக் கட்சி நலன்களுக்காக மாணவர்களைப் பயன் படுத்துவதில்லை என்று அரசியல் தலைவர்கள் உறுதி கொள்ள வேண்டும்" என்று தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் 26-2-56 இல் சென்னை இராமகிருட்டிண மிசன் மாணவர் விடுதி ஆண்டு விழாவில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார். இனிமேல் மாணவர்கள் தம் பக்கம் நிற்கமாட்டார்கள், தமக்குப் பயன்பட மாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிந்தவுடன் தோழர். சி. சுப்பிரமணியம் போன்ற காங்கிரசுக்காரர்கள் மேற்கண்ட உபதேசத்தைப் புரியத் தலைப்பட்டுள்ளார்கள். இந்த உபதேசத்தைக் காங்கிரசுத் தலைவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே உபதேசித்துத் தாமும் கடைப் பிடித்து வந்திருப்பார்களேயானால், அவர்களிடத்தில் நாணயம் இருக்கிறது என்று கூறலாம். காங்கிரசு பல்வேறு அரசியல் போராட்டங்களை நடத்திய போதெல்லாம், காங்கிரசுத் தலைவர்கள்தாம் மாணவர்களையெல்லாம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் விட்டு வெளியேறச் சொல்லியும், தம் அரசியல் போராட்டங்களில் கலந்து கொள்ளச் சொல்லச் சொல்லியும் வலியுறுத்தி வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள்தாம் இன்று ஆட்சிப் பீடம் ஏறிய பிறகு, மாணவர்கள் அரசியல் கருத்துக்களிலே கூடக் கவனம் செலுத்தக் கூடாது என்று உபதேசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது "மாணவர்கள் அரசியலைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டும்; அவர்கள் தம் படிப்புப் பாழாகும் வகையில் அரசியலில் நேரடித் தொடர்பு கொள்ளக் கூடாது" என்றுதான் எப்பொழுதும் கூறி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளர்கள் பள்ளிகளுக்கோ, கல்லூரிகளுக்கோ சொற்பொழிவாற்றச் சென்றால் தம் அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைத்துவிட்டுப் பொதுவான தலைப்புகளில் நின்றுதான் பேசுகிறார்கள். ஆனால் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமது அன்றாடப் பொது அரசியல் மேடைப் பேச்சை முழுக்க முழுக்க அப்படியே பேசுபவர்கள் காங்கிரசு அமைச்சர்களும், காங்கிரசு தலைவர்களுமே ஆவார்கள். அதில் கை தேர்ந்தவர்கள் தோழர்கள் காமராசரும், சுப்பிரமணியமும் ஆவார்கள். தோழர் காமராசரின் சைதாப்பேட்டை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிப் பேச்சும், லயோலாக் கல்லூரிப் பேச்சும் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சொல் ஒன்று செயல் வேறாக நடந்து காட்டும் இப்படிப்பட்ட இழிதன்மை பூண்ட அமைச்சர்கள் தாம் 'உபதேசம்' புரியப் புறப்பட்டுவிடுகிறார்கள். அவர்களின் போக்கு ஏளனச் சிரிப்பைத்தான் உண்டாக்குகிறது.

செய்திச்சுருள்

மிகப்பெரிய தொலைதாக்கி

உலகின் எந்தப் பகுதிக்கும் அணுக்குண்டுகளையும், நீர்வளிக் குண்டுகளையும் தாங்கிச் செல்லவல்ல தொலை இயக்கப்படைக் கருவிகளை உருசியா நாடு உருவாக்கியிருக்கிறதாம்.

பொதுத்தேர்தல் செலவு

1952-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்காகச் சர்க்காருக்கு ஏற்பட்ட செலவு ரூ. 10,26,37,251 என்றும், உபதேர்தல்களுக்காக ஏற்பட்ட செலவு ரூ. 31,50,382 என்றும் இந்தியப் பாராளுமன்றத்தில் அண்மையில் விவகார அமைச்சர் தகவல் கொடுத்துள்ளார்.

காகித உற்பத்தி

சாதாரணக் காகிதம், பத்திரிகைக் காகிதம் ஆகியவற்றை உற்பத்திச் செய்வதற்கான மரச்செல்வம் திராவிடத்தில் நல்ல அளவில் குவிந்து கிடக்கிறது என்று அது பற்றிய ஆராய்ச்சி செய்துள்ள வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

சென்னை மாநிலத்தில் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பாபநாசத்திலும், நீலகிரியிலும், மேட்டூரிலும் காகித உற்பத்திச் சாலைகளை நிறுவும் முயற்சியில் இறங்கி இருப்பதாகச் சென்னை அரசினர் கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள்

"1954 அக்டோபர் 19ஆம் நாளிலிருந்து 1955 அக்டோபர் முடிய இலங்கையிலிருந்து சென்னை மாநிலத்திற்கு வந்து சேர்ந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 17,684 ஆகும். சென்னை சர்க்கார் அவர்களின் புனர் வாழ்வுக்குத் திட்டம் ஒன்றும் வகுக்கவில்லை. கடைகள் வைத்த அகதிகளுக்கு மட்டும் 1955 ஏப்ரல் திங்களிலிருந்து ஒரு ஆண்டு காலம் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டது" என்று சென்னை நிதியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் 2-3-56ஆம் நாள் சென்னைச் சட்ட மன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய சர்க்காருக்கு எடுபிடியாக இருந்து வரும் சென்னை சர்க்கார், வடநாட்டு அகதிகளுக்கு உண்டி—உடை—உறையுள்-தொழில் வசதி—தொழிலுக்கு முதலீடு ஆகிய எல்லா வகை வசதிகளையும் செய்து தருகிறார்கள்; ஆனால் தம் சொந்தநாட்டு அகதிகளைக் காப்பாற்றும் வழிவகை காணாது தவித்துக்கொண்டிருக்கிறார்கள். என்னே இவர்தம் இயல்பு!

திராவிடத்தில் எண்ணெய் ஊற்றுக்கள்

சென்னை, ஆந்திரா, திரு-கொச்சி, அந்தமான் தீவு ஆகிய பகுதிகளில் எண்ணெய் ஊற்றுக்கள் கண்டு பிடிக்கலாம் என்று இந்தப் பகுதிகளிலெல்லாம் ஆராய்ச்சி நடத்திய உருசிய நிபுணர்கள் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளனர்.

திராவிடத்தில் தங்கம்

திராவிடத்தில் கோலார் தங்க வயல் மட்டுமல்லாமல், சேலம் மாவட்டத்திலும், மலபார் மாவட்டத்தில் வயநாடுபகுதியிலும், ஏர்னாடு பகுதியிலும் தங்கம் இருக்கின்றது என்று ஆராய்ச்சி நடத்தியோர் கூறுகின்றனர். மலபார் மாவட்டத்தில் தங்கம் கிடைக்கும் என 1880-ஆம் ஆண்டில் இலண்டன் பத்திரிகைகளில் செய்தி வெளியானதை ஒட்டி அதை எடுக்க இலண்டனில் 33 கம்பெனிகள் உருவாயின வென்றும், அவற்றில் 12 நன்கு பல ஆண்டுகள் வேலை செய்தன என்றும் சொல்லப்படுகின்றன. இப்பொழுது அந்தச் சுரங்கங்கள் பாழடைந்து கிடக்கின்றன என்று சொல்லப்படுகின்றது.

1955-இல் ரூபாய் நோட்டுகள்

1955ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் ரூ. 833,48,29,240க்குப் பல்வேறு மதிப்புள்ள ரூபாய் நோட்டுக்களும், பாங்கு நோட்டுக்களும் அச்சடிக்கப்பட்டன என்று 7—3—56-இல் பாராளுமன்றத்தில் வருமான அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.

இருதய எக்ஸ்ரே எடுக்கும் புதிய கருவி

இருதயத்தைக் குறித்த ஒரு நொடியிலும் கணக்காக எக்ஸ்ரே படம் பிடிக்கும் கருவி ஒன்றைத் தயாரித்திருப்பதாக வாஷிங்டனிலுள்ள தேசிய சுகாதார நிலையத்து இருதய நோய் நிபுணர்கள் அறிவிக்கின்றனர். இருதயம் விரிவதும், சுருங்குவதுமாகிய இருதயத் துடிப்பில் குறித்த எந்த நேரத்திலும் படம் பிடிக்க அது வசதியாக இருக்கிறது என்றும், இதனால் இருதய நோய்களை யறியவும், அவற்றிற்குச் சிகிச்சை செய்யவும் உதவியாக இருக்கிறது என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

அஞ்சல் சேர்ப்பிக்கும் அதிசயம்

☆

அஞ்சல் சேர்ப்பித்தல் என்பது உலகின் பல பகுதிகளில், இன்னமும் தொல்லையும், துன்பமும் தரும் ஒரு தொழிலாகவே அஞ்சல் காரர்களால் கருதப்படுகின்றது.

லீவிஸ்டன் என்ற பகுதியில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு, அஞ்சல்காரர் போய்ச்சேர முடியாத அளவில், 7800 அடி உயரமுள்ள மலைக்குன்றுகள் இடைமறுத்து நிற்கின்றன. அஞ்சல்கள் வைக்கப்பட்ட குழாயைப் பெருந் துப்பாக்கியில் வைத்துச் சுடுவதன் மூலம், அஞ்சல்களை அந்த குறிப்பிடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்க வேண்டிய தொல்லைக்கு அஞ்சல்காரர்கள் ஆளாகிறார்கள்.

உருசிய நாட்டின் சில பகுதிகளில் அஞ்சல் காரர்கள் ஆயுதம் ஏந்தியவர்களாகச் செல்ல வேண்டியிருக்கிறது. இடை வழியில் தாக்க வரும் ஓநாய்களை எதிர்க்க அவர்களுக்கு ஆயுதம் தேவைப்படுகிறது.

இந்தியாவில் பல பகுதிகளில் சிற்றூர்களுக்குச் செல்லும் அஞ்சல்காரர்கள் சதங்கை கட்டிய ஈட்டியையும் வெண்கல மணியையும் எடுத்துச் செல்லுகிறார்கள். கொடிய காட்டு விலங்குகளை அச்சுறுத்தித் துரத்த வெண்கல மணியை ஒலித்துக்கொண்டு போகவேண்டியவர்களாக இருக்கிறார்கள். விலங்குகளையும், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களையும் எதிர்த்து நிற்க அவர்கள் ஈட்டியை ஏந்துகிறார்கள்.

மத்திய ஆப்பிரிக்காக் கண்டத்தில். சில உள்நாட்டுச் சிற்றூர்களை அடைய, அஞ்சல் காரர்கள் நூற்றுக் கணக்கான மைல்கள் காடுகளைக் கடந்து போக வேண்டியிருக்கிறது. அண்மையில் ஒரு அஞ்சல்காரன் ஒரு சிங்கத்திற்கு அஞ்சி ஒருநாள் இரவு முழுவதும் ஒரு மரத்தில் தொத்திக் கொண்டிருந்தான. சிங்கம் அஞ்சல் பையைக் கடித்து, அஞ்சல்களையும் சிதறடித்துவிட்டுத். தனக்கு ஒன்றும் தின்பதற்குக் கிடைக்கவில்லை என்று போய் விட்டது. வேறோர் அஞ்சல்காரனை ஒரு பொழுது பல நெருப்புக் கோழிகள் சேர்ந்து துரத்த ஆரம்பித்தன. அவன் ஓட்டமாய் ஓடி ஒரு மரத்தின் உச்சியில் அடைக்கலம் புகுந்தான்.

பதினேழுவது நூற்றாண்டில் செர்மனி நாட்டில், அஞ்சல்காரர்கள் விரைவாக நடந்து செல்வதற்கு, கம்பங்களைக் கால்களோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு பெருநடை போட்டு நடந்தார்களாம்.

ஸ்பெயின் நாட்டில் அஞ்சல்காரர்கள் காலங் கழித்து அஞ்சல்களைக் கொண்டு போய்ச் சேர்த்தால், அவர்களைச்சிறையில் போடுவதும் அவர்களுக்கு அபராதம் விதிப்பதும் ஆன தண்டனைகள் வழங்கப்பட்டன.

இங்கிலாந்தில் பலூன்களைப் பறக்கவிடுவதில் வல்லுநராகத் திகழ்ந்த ஜிப்சன் (Gypson) என்பவர்தான் வானவெளி மூலம் முதல் முத்திரை யிடப்பட்ட அஞ்சலை அனுப்ப முயன்றார். முத்திரை யிடப்பட்ட அஞ்சலை பலூனிலிருந்து கென்ட் பகுதியின் மேல் பறக்கும் போது கீழே போட்டாராம். இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் ஜெப்ரீஸ் என்பவர் மேகமண்டலத்திற்கு மேல் பலூனில் இருந்துகொண்டு, அஞ்சல்களை எழுதி எழுதிப் போட்டுக் கொண்டிருந்தாராம். "பலூன், மேகமண்டலத்திற்கு மேல்" என்று அஞ்சல்களில் தன் முகவரியைக் குறித்திருந்தாராம்.

1871-ஆம் ஆண்டில் பாரிசு நகரம் முற்றுகையிடப்பட்டிருந்த போது, அஞ்சல்களை வெளியேற்றுவது என்பது இயலாததொன்றாக இருந்தது, தகரத்தில் உட்குடைவுள்ள பந்துகளைச் செய்து. அவற்றில் அஞ்சல்களை வைத்து, அவைகளை நன்றாக அடைத்து,

ஆற்ருேட்டத்தோடு வெளியிடங்களுக்குப் போகும்படியான முறையை கண்டுபிடித்திருந் தார்கள்.

நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே பாரசீகம், கிரேக்கம், இந்தியா ஆகிய நாடுகளில் அஞ்சல்களை எடுத்துச் செல்ல, புருக்கள் பெரிதும் பழக்கப்படுத்தப்பட்டிருந்திருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்ருண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவில் 'புரு அஞ்சல் நிலையங்கள்' ஆங்காங்கு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இலண்டனிலிருந்து பாரிசு நகரத்திற்கு ஆறு மணி நேரத்தில். புருக்கள், அஞ்சல்களை எடுத்துக் கொண்டு போய்ச் சேர்த்தன என்று தெரிய வருகிறது.

பதினுருவது நூற்ருண்டில், ஐரோப்பாக் கண்டத்தில், தனிப்பட்டோரின் நிறுவனங்கள் அஞ்சல்களைப் பட்டுவாடா செய்யும் பணியினை மேறகொண்டிருந்தன. ஒரு நிறுவனம் கொண்டு செல்லும் அஞ்சல்களை இடைமறித்து, வழிப்பறிக் கொள்ளையடிப்பது மற்ருெரு நிறுவனத்தின் வழக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. அந்த நாட்களில் அஞ்சல்களை எடுத்துச் செல்வோர், இடைவழியில் அவைகளையெல்லாம் பிரித்துப் படித்துவிட்டுத்தான், பிற இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது வழக்கம், ஒரு அஞ்சல் கூடப் பிரிக்கப் படாமல் போய்ச் சேருவதில்லை.

மலேயாவில் அஞ்சல் மூட்டைகளை எடுத்துச் செல்ல யானைகளே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுதும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. பாலைவனப் பகுதிகளில் ஒட்டகங்களைப் பயன்படுத்துகிருர்கள். அஞ்சல்காரன் ஒட்டகத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு, அஞ்சலை ஒரு நீண்ட கழியின் நுனியில் கோர்த்துக் கொண்டு உரியவரிடம் நீட்டுவானும்.

ஆல்ப்சு மலையின் உச்சியிலிருக்கும் பிரெஞ்சுப் போர்ப் படைவீரர்களிடம் நாய்கள்தான் அஞ்சல்களை கொண்டு போய்ச் சேர்க்கின்றன. சீனுவில் அஞ்சல்காரர் காவடி மாதிரி தோளில் மூங்கிலை வைத்துக் கொண்டு, அதன் இரு பக்கமும் அஞ்சல் பைகளை மாட்டித் தொங்க விட்டுக்கொண்டு நடந்து சென்று சிற்றூர்களில் அஞ்சல்களைச் சேர்ப்பிப்பார்கள்.

கிறிஸ்துமஸ் காலத்தில் இங்கிலாந்தில், உறையில்லாமல், மடித்து அஞ்சல் பில்லை ஒட்டி அனுப்பப்பட்ட ஐந்து பவுன் நோட்டு உரியவரிடம் போய்ச் சேர்ந்திருக்கிறது.

ஒருபொழுது இங்கிலாந்தில் "கடவுள், மேல் உலகம்" என்று முகவரி எழுதி அனுப்பப்பட்ட அஞ்சல் உறை அந்த முகவரியுள்ள ஆள் அகப்படவில்லை என்று குறிக்கப்பட்டு, அதனை அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பப் பட்டதாம்.

சில அஞ்சல்கள், பல இடங்கள் சுற்றி அவற்றைப் பெறவேண்டியவர்கள் இறந்து முப்பது நாற்பது ஆண்டுகள் ஆன பிறகு, அவர்கள் இருப்பிடம் அறிந்து வந்து சேரும் நிகழ்ச்சிகள் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் வியப்புக் குரியவைகளாக இருந்து வருகின்றன.

சென்ற ஆண்டில் அமெரிக்காவில், சாண்டா கிளாஸ் என்று சொல்லப்படும் ஒரு மிகச் சிறிய நகரில் கிருஸ்துமஸ் நாளில்மட்டும், 40,00,000 அஞ்சல்களும், கட்டுகளும் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டனவாம்.

அமெரிக்காவில், குறிப்பிட்ட பெரு நகரங்களில் குறைந்தது பகலில் ஆறு தடவைகளிலும், இரவில் மூன்று தடவைகளிலும் அஞ்சல்கள் பட்டுவாடா செய்யப்படுகின்றனவாம்.

இங்கிலாந்தில் அரசனைவிட அஞ்சலுக்கு மிகவான மதிப்பு நீண்ட காலமாகவே கொடுக்கப்பட்டு வருகிறது. அஞ்சல் வண்டிகள் வருகின்றன என்ருல் அவற்றிற்கு முதலில் வழி விட்டுத்தான் பிறகு அரசனது வண்டியானுலும் போக வேண்டும்.

அரசனுனுலும் ஆண்டியானுலும், பணக்காரனுனுலும் ஏழையானுலும், அதிகாரியானுலும், சேவகன் ஆனுலும், படித்தவனுனுலும், பாமரனுனுலும் எல்லோரும் எழுந்து வந்து, விரும்பி எதிர்பார்த்து, எதிர்கொண்டழைப்பது அஞ்சல்காரனையே ஆகும்!

அஞ்சல் சேர்ப்பிக்கும் அதிசயம் இந்தக் காலங்களில் எவ்வளவோ எளிதானதாகவும், விரைவானதாகவும், முறையானதாகவும் ஆக்கப் பட்டுவிட்டது!

ஜோசப் பிரீஸ்ட்லி

மதத் துறையில் பணியாற்றப் புகுந்து அறிவு வேட்கை கொண்டதனுல் பொருள் களின் உண்மையை அறிய முற்பட்டு, அறிந்த கருத்துக்களை வெளியிட்டு, அதனுல் 'மத விரோதி' என்ற பட்டம் பெற்று தீயால் மடி யும் தண்டனையும் ஏற்று, தணல் தன்னுடலைக் கருக்கிய நேரத்திலும் உண்மையை மறுத் துறைக்காமல் உயிர் நீத்த புருனோவைப் போல், மடாலயப் பயிற்சி பெற்று பணி புரிந்த ஜோசப் பிரீஸ்ட்லி எனபாரும் மதத் துறை யிலிருந்து வெளியேறிய அறிவியல் அறிஞ ராகும்.

மத குருமாராக தன் வாழ்க்கையை ஆரம் பித்த நேரத்தில் மதத்தைச் சீர்த்திருத்தும் நோக்கங் கொண்டார், மார்ட்டின் லூதரைப் போல். மதம் அவரது கருத்துக்களை தீதெனக் கண்டித்தது. சூழ்நிலை அவரை அறிவாலயத் திற்கு அழைத்துச் சென்றது. பல துறைப் பட்ட நூல்களையும் கற்ருர். உண்மைகளை அறிந்ததோடு புதிய உண்மை பலவும் கண் டார். அறிவியல் அறிஞரானுர்.

"இங்கிலாந்தில், பதினெட்டாம் நூற் ருண்டில் அறிவாற்றலுக்கு எடுத்துக் காட் டாக விளங்கிய ஒரு மனிதரை நாம் தேர்ந் தெடுக்க முற்பட்டால் ஜோசப் பிரீஸ்ட்லியைத் தவிர வேறெருவரையும் நாம் காணமுடியாது. அவரது பண்பட்ட பயிற்சி, அறிவின் வேட்கை, விடாமுயற்சி, மனிதாபிமானம்; அறிவியல், சமய சித்தாந்தம், தத்துவம், அரசியல் ஆகிய வற்றில் அவர் பெற்ற இடம்; பிரெஞ்சுப் புரட் சிக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு; இன் னல்களுக்கிடையே அவர் வாழ்ந்த பரிதாப கரமான கதை.—இவைகளே அவரை பதி னெட்டாம் நூற்ருண்டின் இணையற்ற வீரனுக விளங்கச் செய்கிறது" என்று பிரெடரிக் ஆரிசன் என்பவர் பிரீஸ்ட்லியைப் பற்றிக் குறிப்பிடு கிருர்.

பிரீஸ்ட்லியின் வாழ்க்கை வரலாற்றை ஏற்ற சொற்களிட்டு ஒரு சில வரிகளிலேயே கூறிவிடுகிருர் ஆரிசன்.

மதக் குருமாராக வாழ்க்கையை ஆரம் பித்த நேரத்தில், தான் ஒரு அறிவியல் வல் லுனராக ஆகவேண்டும் என்ற எண்ணமே பிரீஸ்ட்லியிடம் ஏற்படவில்லை. ஆனுல் ரசா யனத் (Chemistry) துறை வளர்ச்சியில் பங்கு பெற்றவர்களில் பிரீஸ்ட்லி முக்கியமான வராக அழைக்கப்படுகிருர்.

காற்றின் தன்மையை ஆராய்ந்து, உயிர் வளியையும் மற்றும் 'பல வகைப்பட்ட காற் றுக்களையும்' கண்டு பிடித்து பல துறைகளி லும் முன்னேற்றம் ஏற்பட வழி செய்தார்.

பிரீஸ்ட்லி, லீட்ஸ் நகருக்கு அருகிலுள்ள பீல்ட்ஹெட் (Fieldhead) என்ற சிற்றூரில், 1733ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 13ம் நாள் ஜொனுஸ் பிரீஸ்ட்லி என்பவருக்கு மூத்த மகனுகப் பிறந்தார். ஜோசப்பையடுத்து மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தனர். பிரீஸ்ட்லி குடும்பத்தினர் கைத்தறி ஆடை நெய்வதில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தி வந்தனர்.

இங்கிலாந்தில் அப்பொழுது "அடிபணியா இயக்கம்" என்றதொரு மதயியக்கம் வளர்ச்சி பெற்று வந்தது. இந்த இயக்கத்தினர் கிருத் தவ மதத்தின் சில வழக்க முறைகளை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஏழு புனிதக் கோட்பாடுகளை (Seven Sacraments) அவர்கள் மறுத்தனர். இதனுல் அவர்களுக்கு அடிபணியாதார் என்ற பெயர் ஏற்பட்டது.

பிரீஸ்ட்லி பரம்பரையினர் இந்த அடி பணியா இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகும். ஆனுல் மதப்பற்று அவர்களிடத்தில் மிகவாக ஊறிக்கிடந்தது. அடிபணியா இயக்கத்தினர் சில வழக்கங்களை ஏற்க மறுத்தனரேயன்றி மற்ற மதக் கொள்கைகளை மறுக்கவில்லை. பிரீஸ்ட்லியின் அன்னை மேரி என்பவள் தனது குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே மதக் கொளகைகளை சொல்லிக் கொடுத்து 'மதவினு விடை' என்ற நூலையும் ஒப்புவிக்கச் செய் தாள்.

பிரீஸ்ட்லி தனது பன்னிரண்டாவது வயதில் ஏக் என்ற மதக் குருமாரிடம் மாணவனுகச் சேர்ந்து அவரிடம் லத்தீன் மொழி பயின்று கிரேக்கக் கருத்துக்களை அறிந்தான். இதையல்லாமல் விடுமுறை நாட்களில் கிர்க்பி என்ற அடிபணியா இயக்க மதகுருவிடம் ஈப்ரு மொழி பயின்று நாளாவட்டத்தில் அவரிடத்திலேயே மாணவனுகச் சேர்ந்தான்.

பல மொழிகளை அறிந்து பல நூல்களையும் கற்றுத் தேர்வதில் பிரீஸ்ட்லி காட்டிய ஆர்வத்தைக் கண்டு அவரை வளர்த்து வந்த [illegible] அவரது [illegible] சாரா—அவனுடைய தாய் மேரி அவர் 6 வயதுச் சிறுவனுக இருக்கும் போதே இறந்து விட்டாள்—அவர்கள இயக்க மதக்குரு பயிற்சிக்கு அவரை அனுப்பலாம் என்று எண்ணினுள். அக்காலத்தில் படிப்பு என்ருல் அது மதக்குருமார்களின் ஏகபோக உரிமை என்ற நிலைமையிருந்தது. ஆரம்ப காலத்திலிருந்து ஒவ்வொரு துறையும் மதக் குருமார் கையில் தான் இருந்தது. மதக்குருமார் தான் முழுதும் அறிந்த அறிஞர் என்ற கருத்து நிலவியிருந்தது. ஆகவே தான் படிப்பில் ஆர்வங் காட்டிய பிரீஸ்ட்லியும் நல்ல குருமாராகத் திகழலாம் என்று சாரா எண்ணினுள். பிரீஸ்ட்லியும் அதற்கிணங்கி பயிற்சி பெற்று வந்தான்.

ஆசிரியரில்லாமலேயே பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தான். நூல்கள் பலவற்றையும் படிக்கப் படிக்க அவரது அறிவும் வளர்ந்து பலதிறப்பட்ட கருத்துக்களையும் மதக் கோட்பாடுகளையும் காரண காரியத்தோடு ஆராய முற்பட்டான்.

உண்மையறியும் வேட்கை வளர வளர அவர் படிக்கும் நூல்களின் எண்ணிக்கையும் அதிகமாகி, ஆழ்ந்த சிந்தனையால் மன அமைதியற்ற ஒரு நிலைக்கு வந்தார். குழந்தைப் பருவத்தில் தாய் சொல்லிக் கொடுத்த மதக் கருத்துக்களை, வினு விடைகளை வரி விடாமல், வார்த்தைகள் பிறழாமல் ஒப்பித்தவர் இப்பொழுது சந்தேகங் கொண்டவராக, பொருள் தெரியாத நிலையில் மனதிலே ஏற்றி வைக்கப்பட்ட கருத்துக்களின் உண்மையை அறிந்து கொள்ள முற்பட்டார். எவரும் நடக்கத் துணிவு கொள்ளாத பாதையில் பிரீஸ்ட்லி அடியெடுத்து வைத்தார்.

"ஆதாமின் பாவச் செயலால் மனித சமுதாயமே ஆண்டவனது தொடர்பையிழந்து அவனது சாபத்தால் வாழ்க்கையில் பல துன்பங்களை ஏற்கவும், கடைசியாக இறக்கவும், இறந்த பின்னுல் நரகத்தில் சென்று உழலவும் நேரிட்டது" என்று கூறப்படும் விளக்கத்தை அவருடைய நியாய, நேர்மையான மனதால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

சமயத் திருக்கூட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து மதக் கருத்துக்களை ஆராய எண்ணங் கொண்ட பிரீஸ்ட்லி அதற்கு மனுச் செய்து கொண்டார். அப்போது தான் அவருடைய மத நம்பிக்கையைக் கண்டித்து குருமார் மன்றத்திலே நடைபெற்ற முதல் விசாரணையாகும்: 'ஆதாமின் பாவச் செயல்' பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டதை எடுத்துக் காட்டி அதிகாரத்தில் வீற்றிருந்த மதக் குருமார்கள் பிரீஸ்ட்லிக்கு அனுமதிதர மறுத்தனர்.

பிரீஸ்ட்லி 1752ல் குருமார் பயிற்சிக்காகத் திகழுந்த தாவந்திரி கழகத்தில் மாணவராகச் சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது பத்தொன்பதாகியது.

தாவந்திரி கழகத்தின் சூழ்நிலை ஜோசப்பிற்கு ஏற்றதாக அமைந்திருந்தது. அப்போது, மற்ற 'பழைய' பல்கலைக்கழகங்களில் அறிவு என்னும் ஒளி விளக்கு மங்கிய நிலையில் 'பழைய' ஏற்பாடான ஆலய முறைகளைச் சந்தேகிப்பவர்களுக்கு அவைகளின் அகன்ற கதவுகள் மூடப்பட்டிருந்த நேரத்தில், தாவந்திரிக் கழகத்தில் அறிவு ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்தது.

ஆசிரியர்களிடம், மாணவர்கள் தங்களுக்குள்ள கருத்து வேற்றுமைகளை எடுத்துக் கூறி விளக்கம் பெறும் உரிமை பெற்றிருந்தனர். பிரீஸ்ட்லி அங்கே பல துறைகளிலும் கற்று தனது அறிவு வளத்தைப் பெருக்கிக் கொண்டார்.

மூன்ருண்டு பயிற்சிக்குப் பிறகு தனது 22வது வயதில் பிரீஸ்ட்லி, சாராவின் விருப்பம் நிறைவேறும் வகையில் மதக்குரு என்ற தகுதியைப் பெற்ருர்.

உயர்ந்த எண்ணங்களை மனதிலே கொண்டு வாய்ப்பினை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். கிருத்தவ மதப் போதகர் பதவி உலகில் பெருமைக்குரிய உயர்ந்த ஒன்ருகும் என்ற எண்ணம் முதலில் பிரீஸ்ட்லியிடம் இருந்தது.

சபோக்கிலுள்ள நீட்காம் என்ற ஊரில் இருந்த மதக்குழு பிரிஸ்ட்லிக்கு அழைப்பு விடுத்தது. அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு நீட்காம் போய்ச் சேர்ந்தார்.

மதத்தைப்பற்றிய தனது சொந்தக் கருத்துக்களை ஆலய சொற்பொழிவுகளின் போது வெளியிட்டு சச்சரவிற்கு இடமளிக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் தான் பிரீஸ்ட்லி நீட்காம் நகர ஆலயத்தில் மதப்போதகராக நுழைந்தார். எனினும் வேறுபாடுகளை வெளியாக்கிடும் மதக்கருத்துக்கள் அவரது உரையாடல்களிலும், சொற்பொழிவுகளிலும் கலக்கத்தான் செய்தன. அவரது சொற்பொழிவுகளைக் கேட்டு, அவரது உள்ளத்தைக் கண்டு அவரிடம் பழகுவதே ஆபத்து எனக்கொண்டனர் மதப்பற்றுடையோர்.

ஆண்டவனின் மகிமைகளை எடுத்துக்கூறி மக்கள் மறுபிறப்பில் நரகத்தையொழித்து சொர்க்கத்திற்குச் செல்லும் வழியை விளக்கிடும் மதாலயப் போதனையைவிட, இயற்கையின் தன்மையை எடுத்துக் காட்டி, இவ்வுலக வாழ்வின் உண்மையை விளக்கிடும் அறிவாலயப் போதனை பிரீஸ்ட்லியைப் பெரிதும் கவர்ந்திருக்கவேண்டும். ஏனெனில் பிரீஸ்ட்லி, நீட்காலுமுள்ள மாணவர்களுக்கு கணிதம், இலக்கியம் முதலிய பல கலைகளையும் சிறிய ஊதியம் பெற்றுக் கொண்டு கற்றுத் தருவதாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தெரிவித்திருந்தார். ஆனல் அவர் பாதுகாப்பில் ஒரு மாணவன் கூட ஒப்படைக்கப்படவில்லை. நீட்காம் நகரில் அவருடைய எண்ணத்திற்கு, முயற்சிக்கு மக்கள் ஆதரவுதரவில்லை.

மூன்றுண்டுகளுக்குப் பிறகு நான்ட்விச் என்ற நகரிலிருந்து அழைப்பு வந்து பிரீஸ்ட்லி அங்கு சென்ருர். அங்கிருந்த ஆலயம் மிகக் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. ஆகவே பிரீஸ்ட்லிக்கு அதிக வேலை இல்லை. ஓய்வு நேரங்களில் தனது ஆசிரியர் பணியை மேற்கொண்டார். மாணவர் சிலரும் அவரிடம் சேர்ந்தனர். அவருடைய உற்சாகம் பெருகி கல்வித்துறையில் சில மாற்றங்களைச் செய்ய முயன்ருர். ஒரு புதுமுறை ஆங்கில இலக்கண நூலைத்தொகுத்து மாணவர்கள் பயனடையுமாறு செய்தார். கல்வித்துறையில் பிரீஸ்ட்லி அடைந்த வெற்றி கண்டு வாரிங்டன் கல்விக் கழகத்தினர் அவருக்கு ஆசிரியர் பதவி கொடுத்து அழைப்பு விடுத்தனர்.

1761-ம் ஆண்டில் பிரீஸ்ட்லி மதப்போதகர் பதவியை விட்டு ஆசிரியராக வாரிங்டன் கழகத்தில் நுழைந்தார். அங்கு மாணவர்கள் கிருத்தவ மதப்போதகர் பயிற்சி பெற்றனர். ஆனல் அங்கிருந்த ஆசிரியர்கள் அடிபணியாயியக்கத்தில் பெரும் பங்கு கொண்டவர்களாக விளங்கினர்.

பிரீஸ்ட்லி 1762ல் மேரி வில்கின்சன் என்பவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார். மடாலயம் புகவிருந்த பிரீஸ்ட்லியை அறிவாலயத்திற்கு அழைத்தது வாரிங்டனில் அவர் கழித்த ஏழாண்டு வாழ்க்கை என்னலாம். பல பொருள்களை ஆராய்ந்து உண்மை கூறும் உரிமை அங்கு கொடுக்கப்பட்டிருந்தது. பிரீஸ்ட்லி எல்லா துறைகளிலும் புகுந்து படிக்க ஆரம்பித்தார். அரசியல், பொருளாதாரம், சரித்திரம் முதலிய துறைகளில் அவர் எழுதிக் குவித்த நூல்கள் பலவாகும்.

அப்போது பிரீஸ்ட்லி ஆண்டுக்கோர்முறை லண்டன் மாநகர் சென்று தனது குடும்பத்துடன் ஒருமாத காலம் வரைத் தங்கித் திரும்புவார். அப்படி ஒருமுறை சென்ற போது பெஞ்சமின் பிராங்லின் ஜான் கான்டன் போன்ற அறிவியல் அறிஞர்களின் தொடர்பு ஏற்பட்டது. இதற்குப் பின்தான் பிரீஸ்ட்லிக்கு அறிவியல் ஆர்வம் அதிகமாயிற்று, பிராங்கிலின் போன்ருரின் தூண்டுதலின் பேரில், பிரீஸ்ட்லி "மின்சாரத்தின் வரலாறு" என்ற ஒரு நூலைத் தொகுத்து, பல்வேறு மின்சாரக் கண்டு பிடிப்புகளையும் விளக்கிக் கூறும் ஒரு நூலாக அதனை வெளியிட்டார். இந்த நூல் பிரீஸ்ட்லியை ஒரு அறிவியல் வல்லுநர் என்பதை எடுத்துக் காட்டியது. 1766ல் அவர் அரசினர் கழகத்தில் (Royal Society) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1767ல் வாரிங்டன் கழகத்தை விட்டு நீங்கி லீட்ஸ் நகருக்கு மதப்போதகராகச் சென்ருர். பிரீஸ்ட்லியின் அறிவியல் ஆராய்ச்சிகள் லீட்ஸ் நகரில் தான் ஆரம்பமாகியது. தனது வீட்டிலேயே ஒரு ஆய்வுச்சாலையை ஏற்படுத்திக் கொண்டு தனது ஆராய்ச்சிகளை நடத்திஞர்.

பிரீஸ்ட்லியின் ஆராய்ச்சிகள் காற்று சம்பந்தப்பட்ட பொருள்கள்பற்றியே இருந்தது. காற்றிலே கலந்திருக்கக்கூடிய பலவகைப்பட்ட வாயுக்களை கண்டுபிடித்து அதனதன் தன்மைகளையும் அறிந்து கூறினர். சோடா நீரிலிருந்து (Soda Water) சிரிக்கும் வாயு (Laughing Gas) வ்ரை பலப்பல கண்டுபிடிப்புகளுக்கு அவர் காரணமாக இருக்கிருர். சல்பர் டையாக்சைடு, (Sulphur Dioxide), உயிர் வாயு, (Orygen) ஐட்ரசன் குளோரைட் (Hydrogen

Chloride), நைட்ரோசல்ப்யூரிக் அமிலம் (Nitro-sulphuric acid) முதலியன அவர் கண்டுபிடித்தவைகளிலே முக்கியமானதாகும். 1773-ல் சோடா நீரைக் கண்டுபிடித்ததற்காக பிரீஸ்ட்லிக்கு கேப்லே பதக்கம் (Capley Medal) அளிக்கப்பட்டது.

பிரீஸ்ட்லியை ஒரு அறிவியல் அறிஞர் என்று கூறுவதைவிட ஒரு அறிவியல் வேதாந்தி என்று கூறலாம். அறிவியல் துறையில் செலவழித்த நேரத்தைப்போலவே மதத்துறையிலும் பணியாற்ற விரும்பினார். ஆனால் அவரது மதக்கருத்துகள் "நாத்திக" கருத்துகள் என்று மதவாதிகள் கூறியதோடு எந்த அளவில் எந்த பொழுதில் பிரீஸ்ட்லிக்கு தொல்லைதர இயலுமோ அதையெல்லாம் செய்தார்கள்.

பிரீஸ்ட்லி லீட்ஸ் நகரில் ஆறு ஆண்டுகள் தங்கியிருந்தார். பின் லார்ட் ஷெல்பர்ன் என்பவரின் ஆதரவில் தனது ஆராய்ச்சிகளை நடத்திவந்தார். ஆனால் அவரது எதிரிகளின் தொல்லையினால் ஷெல்பர்னின் ஆதரவு நெடுநாளைக்குக் கிடைக்கவில்லை. 1780-ல் பர்மிங்காம் நகருக்கு வந்து சேர்ந்தார். அங்கே நண்பர்களின் ஆதரவில் பிரீஸ்ட்லி தனது முயற்சியை மேற்கொண்டார்.

பர்மிங்காம் நகரில் ஆரம்பிக்கப்பட்ட லூனர் சொசைட்டி (Lunar Society)யில் பிரீஸ்ட்லி உறுப்பினராகினார். அதில் உறுப்பினர்கள் தகள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறவும் அவைகளின் நிறைகுறைபற்றி மற்றவர்கள் விவாதிக்கவும் முறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

ஆனால் நெடுநாளைக்கு பிரீஸ்ட்லி அமைதியான அவ்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்க முடியவில்லை. 1791ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14ம் நாள் பிரெஞ்சுப் புரட்சியை யொட்டி பர்மிங்காமில் ஒரு விருந்து விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரீஸ்ட்லி அதில் கலந்துகொள்ளவில்லை என்றாலும், அவரது எதிரிகள் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரீஸ்ட்லியை 'புரட்சிக்காரன்', 'மன்னனையும் மதத்தையும் கெடுக்கும் சதிகாரன்,' என்று மக்களிடையே செய்தியைப் பரப்பினர். இதையடுத்து மத அதிகாரிகளால் ஏவப்பட்ட ஒரு கூட்டம் பிரீஸ்ட்லியின் வீட்டையும் அவரது ஆய்வுச்சாலையையும் தாக்கிற்று. ஒரு சில மணி நேரத்தில் பிரீஸ்ட்லியின் வீடும் அவரது ஆராய்ச்சிக்கூடமும் தீக்கிரையாகியது. பிரீஸ்ட்லி தனது நண்பர்களின் உதவியால் தனது மனைவி மக்களுடன் தப்பி லண்டன் மாநகர் சென்று சேர்ந்தார்.

லண்டனிலும் பிரீஸ்ட்லி அமைதியாக வாழ முடியவில்லை. அவரது எதிரிகளால் எந்த நேரத்திலும் அவருடைய உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்ற நிலை ஏற்பட்டது. 1794ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8ம் நாள் தான் பிறந்த தாயகத்தை விட்டு அமெரிக்காவுக்கு கப்பலேறினார் பிரீஸ்ட்லி தனது மனைவி மக்களுடன். அமெரிக்காவில் பலப்பல கழகங்கள் அவருக்கு வாழ்த்துகளும் வரவேற்பும் அளித்தன. பிலடெல்பியா பல்கலைக் கழகம் அவருக்கு பேராசிரியர் பதவியளிக்க முன்வந்தது.

ஆனால் பிரீஸ்ட்லி எந்தப் பதவியையும் ஏற்றுக் கொள்ளவில்லை. நார்தம்பர்லந்து என்ற நகரில் சென்று தனது குடும்பத்துடன் குடியேறினார். அங்கு தான் பிரீஸ்ட்லி அமைதியைக் கண்டார். பெரும்பகுதி நேரங்களை தனது ஆராய்ச்சிகளிலும், மதச் சீர்திருத்த நூல்கள் எழுதுவதிலும் செலவிட்டார்.

பிரீஸ்ட்லி 1804ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6ம் நாள் தனது எழுபத்தோராவது வயதில் இறந்தார். மதத்தின் கொடுமைகளுக்கு ஆளான அறிவியல் அறிஞர்களுள் ஜோசப் பிரீஸ்ட்லியும் ஒருவர்.

★

பெத்த நாயக்

இப்பொழுது, சென்னையில், **போலீஸ் கமிஷனர்** என்னும் பதவி வகிப்பவர் பார்த்துவரும் வேலையை, வெள்ளையர்கள் குடியேறிய ஆரம்பக் காலத்தில் **பெத்த நாயக்** என்னும் பதவி வகித்தவர் பார்த்து வந்தனர். 'பெத்த நாயக்' என்ற பதவியே ஆணை செலுத்துவதி லும், தகுதி பெறுவதிலும் நாளுக்கு நாள் உயர்வு பெற்று, இன்றைய நிலைமையில் 'போலீஸ் கமிஷனர்' என்ற பெயர் பெற்றிருக் கிறது.

சென்னை சிதம்பரம் நகரில் (ஜியார்ஜ் டவுன்) **பெத்த நாயக்கன் பேட்டை** என்று அழைக்கப் படும் பகுதி, அப்பெயரால் அழைக்கப்படுவ தற்குக் காரணம், பெத்த நாயக் என்ற பதவி வகித்த அதிகாரி ஒருவர், அந்தப் பகுதியில் வாழ்ந்ததே யாகும்.

பெத்த நாயக் என்ற பதவி கிழக்கிந்திய கம் பெனியால் ஒப்புக் கொள்ளப்பட்டு நடை முறைப்படுத்தப் பட்டதாகும். கிழக்கிந்திய கம்பெனியின் ஆரம்ப நாட்களிலிருந்தே கோட் டையைச் சுற்றியுள்ள சென்னைப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரங்கள் கம்பெனியால் பெத்த நாயக் என்ற பதவியாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. அப்பொழுது கறுப்பர் பட்டினம் என்று வழங் கப்பட்ட சிதம்பர நகர் பகுதியையும், பிற பேட் டைகளையும் கண்காணித்துக் கொள்ளவேண் டிய பொறுப்பு பெத்த நாயக்கைச் சார்ந்ததாக இருந்தது. குற்றவாளிகளை விசாரணைக்குக் கொண்டு வந்து நிறுத்தும் உரிமைகளும் பெத்த நாயக்கிடம் விடப்பட்டிருந்தன. பெத்த நாயக் தனக்குக் கீழே தனக்கு உதவி யாகப் பணி புரிவதற்கென்று பல தலையாறி களை நியமித்துக் கொண்டான். தலையாறிகள் தாம் அந்தக் காலத்திய போலீஸ்காரர்கள். 1640-ஆம் ஆண்டில் பெத்த நாயக்கின் கீழ் 20 தலையாறிகள் பணி புரிந்திருக்கின்றனர். 1653-ஆம் ஆண்டில் 50 தலையாறிகள் இருந்த னர் என்று தெரியவருகிறது. குற்றவாளி களைத் தலையாறிகளின் உதவியோடு சென்று கைது செய்வதும், அவர்களைச் சிறையில் போடுவதும், விசாரணைக்காகக் கவர்னர் முன் னிலையில் அவர்களைக் கொண்டுபோய் நிறுத்து வதும், கவர்னரால் தண்டனை கொடுக்கப்பட் டால் அவர்களை மீண்டும் சிறையில் தள்ளுவ தும், கவர்னரால் அபராதம் விதிக்கப்பட்டால், அந்த அபராதத் தொகையை அவர்களிட மிருந்து வசூலிப்பதும் ஆன பல்வேறு பணி களைப் பெத்த நாயக் செய்ய வேண்டியவனாக இருந்தான். கறுப்பர் பட்டினத்திலும், பிற பேட்டைகளிலும் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய முழுப் பொறுப்பும் அவனைச் சார்ந்ததாகும். கூச்சல் போட்டுக் குழப்பங் களையும் சண்டை சச்சரவுகளையும் வளர்ப்பவர் களைப் பிடித்துச் சிறையிலிட்டுக் சத்திர வழக்கு மன்றத்திற்கு (Choultry Court) அழைத்துச் செல்வதும் அவன் பணியாகும். இந்தப் பணிகளை யெல்லாம் செய்வதற்காகப் பெத்த நாயக்குக்கு, குத்தகை வரியில்லாமல் சிறிது நெல் விளையும் நஞ்செய் நிலங்கள் கம் பெனியால் விடப்பட்டன. மேலும் அரிசி, மீன், எண்ணெய் வித்துக்கள், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றின்மீது சிறிதளவு துணை வரி விதித்து, அதனை வசூலித்துக் கொள் ளும் உரிமையும் பெத்த நாயக்குக்கு வழங்கப் பட்டிருந்தது.

பெத்த நாயக், முக்கியமான நேரங்களில், தலையாறிகள் புடைசூழ, மேலதிகாரிகளுக்கு பாதுகாப்பு அளித்துவந்தான். 1685-ல் இரண் டாம் ஜேம்ஸ் மன்னன் முடி சூட்டிக் கொண்ட போதும், 172-இல் 'மேயரின் கோர்ட்' நிறுவப் பட்ட போதும், 1741-இல் கருநாடக நவாப் தன் குடும்பத்தோடு சென்னை வந்தபோதும் பெத்த நாயக் குதிரைமீது அமர்ந்து, ஊர் வலத்திற்குத் தலைமை வகித்துச் சென்றான். அப்படிப்பட்ட நேரங்களில் மற்ற தலையாறிகள் தனித்தனிக் குதிரைகளில் ஏறி அவனுக்குப் பின்னால் அணிவகுத்துச் சென்றனர். பின் னால் கொம்புகளும் தப்பட்டைகளும் முழங்க, மேளக்கச்சேரியுடன் சதிராடுபவர்கள் நாட் டியமாடி வந்தனர். பின்னால் சென்னை ஷெரீப்பு வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட குதிரை மீது அமர்ந்து வந்தான். நகர முக்கிய மானவர்கள் குதிரைகள் மீதும் கோச்சு வண்டி களிலும் ஏறிவந்தனர். பாண்டு வாத்தியம்

முழங்கயானைகள் புடை சூழக், கவர்னர் அழகான கோச்சு வண்டியில் பவனி வந்தான்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில், பெத்த நாயக் பதவியை யார் ஏற்பது என்பதில், திம்மப்பநாயக்கருக்கும், அங்காரப்ப நாய்க்கருக்கும் கடுமையான போட்டி ஏற்பட்டது. அங்காரப்பநாய்க்கரே அந்தப் பதவியை ஏற்க வேண்டும் என்று 1669-இல் கவர்னர் முடிவாகத் தீர்ப்பளித்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பெத்த நாயக் பதவி வகிப்பவரைப் பற்றிப் புகார்கள் கிளம்பின. பெத்த நாயக் தன்னுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதில்லை என்றும், இரவு நேரங்களில் ஒழுங்கீனமாக நடப்பவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்கும் வகையில் தலையாறிகள் ஊர்சுற்றி வருவதில்லை என்றும், குற்றவாளிகளைக்கைது செய்வதில் போதுமான அக்கரை காட்டுவதில்லை என்றும் குற்றங்கள் சாட்டப்பட்டன. பொது மக்களுக்கு முன்னால் மூன்று சாட்டை அடி கொடுக்கப்பட வேண்டும் என்றும், இரண்டு ஆண்டு காலத்திற்குச் சாலை போடும் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும், 'சத்திர வழக்கு மன்றத்'தால் தண்டிக்கப் பட்ட கொடுமைக்குப் பேர்போன கொள்ளைக்காரன் ஒருவனைத், தப்பியோடவிட்டான் பெத்த நாயக் என்ற குற்றச் சாட்டும் அவன் மீது சுமத்தப்பட்டது. பெத்த நாயக் என்ற பதவியால் போதுமான பலன் ஏற்படவில்லை என்று அறிந்தவுடன், கம்பெனியார் 1796-ஆம் ஆண்டு அந்தப் பதவியை அகற்றிவிட்டார்கள்.

பெத்தநாயக்குகளின் தூண்டுதலின் பேரில், பொதுமக்களின் சார்பாக மீண்டும் பெத்த நாயக் என்ற பதவியாளரை நியமிக்க வேண்டும் என்று கோரும் விண்ணப்பம் ஒன்று கம்பெனியாரிடம் கொடுக்கப்பட்டது. ஒழுங்கும் பாதுகாப்பும் ஊரில் நிலவ பெத்த நாயக் ஒருவர் கட்டாயம் இருந்தே தீர வேண்டும் என்றும். பெத்தநாயக் இல்லாவிட்டால் சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் பாதுகாப்பு அறவே இல்லாமல் போய்விடும் என்றும், பெத்தநாயக்கின் சம்பளத்திற்குத் தாங்களும் ஒரு பகுதி ஈடு கட்டுகிறோம் என்றும் பொது மக்கள் விண்ணப்பத்தின் மூலம் கேட்டுக் கொண்டனர். போலீஸ் கமிட்டி ஒன்றின் சிபாரிசின்பேரில், மீண்டும் பெத்த நாயக்கை நியமிக்க, கம்பெனியார் 1798-இல் ஒப்புதல் தந்தனர். 100 தலையாறிகளுக்குக் குறையாத கண்காணிப்புப்படை ஒன்றை நிறுவிக் கொள்ளும் அதிகாரம் **உக்கிரப்ப நாயக்** என்ற பெத்த நாயக்குக்கு அளிக்கப்பட்டது. துண்டுத்துணிகள், கச்சரப்பட்டுகள், மருந்துகள், எண்ணெய் வித்துக்கள், தேக்கு ஆகியவற்றின்மீது துணைவரி விதித்து அதனை அவன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதைத் தவிர பெரியவீடு ஒன்றுக்கு மூன்று பணம் வீதமும், சிறிய வீடு ஒன்றுக்கு இரண்டு பணம் வீதமும் வீட்டுக்காவல் வரி விதித்து, அதனையும் அவன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. மேற்கூறப்பட்டபடி வரி செலுத்துவோர் வீடு, கொள்ளையிடப்பட்டால், அந்த வீட்டுக்காரர் பெத்த நாயக்கிடம் முறையிட்டுக் கொள்ளவேண்டும் என்றும், பெத்த நாயக் இரண்டு திங்கள்களுக்குள் கொள்ளையிடப்பட்ட பொருளகளை மீட்டுத்தர வேண்டும் என்றும், பொருள்களைத் திரும்பப்பெறாத நிலையில் வீட்டுக்குரியோர் கவர்னரிடமாவது அல்லது அமைதியை நிலவச்செய்யும் நீதிபதிகளிடமாவது விண்ணப்பித்துக் கொண்டால், அந்தப்பொருள்களுக்குள்ள விலைமதிப்பை வீட்டுக்குரியோரிடம் கொடுக்கும்படி பெத்த நாயக் வற்புறுத்தப்படுவார் என்றும் விதிகள் விதிக்கப்பட்டன.

பெத்தநாயக் பதவி மீண்டும் 1806-ஆம் ஆண்டுவரையில் நீடித்து வந்தது. 1806-ஆம் ஆண்டில் பெத்த நாயக் என்ற பெயரும், தலையாறிகள் என்ற பெயரும் அகற்றப்பட்டு முறையே கமிஷனர் என்றும், போலீஸ்காரர்கள் என்றும் பெயர்கள் இடப்பட்டன. இந்தப் போலீஸ் இலாகா கிழக்கிந்திய கம்பெனியின் நேரடி நிர்வாகத்தின் கீழ்க்கொண்டு வரப் பட்டது, 1858-ஆம் ஆண்டில், இந்தப் போலீஸ் இலாகா, மேலும் சீர்திருத்தம் செய்யப்பட்டுச் சென்னை மாகாணத்திலுள்ள முக்கியமான நகரங்களிலெல்லாம் நிலைநாட்டப் பட்டது.

இந்தப்படியாகச் சென்னையிலுள்ள போலீஸ் கமிஷனர் பதவி, நடைமுறைக்கு நாளடைவில் வந்து சேர்ந்தது. இப்பொழுதும், சென்னைப் போலீஸ் கமிஷனர், மற்ற மாவட்டங்களிலுள்ள தலைமைப் போலீஸ் அதிகாரிகளைக் காட்டிலும் மிகவானத் தனி அதிகாரங்களைப் பெற்றுதான் ஆணை செலுத்தி வருகிறார். **மதராஸ் பட்டினம் பெத்த நாயக்கின்** வழிவழிவந்த பதவியே **போலீஸ் கமிஷனர்** பதவியாகும் என்பதை, அத்தகைய தனி அதிகாரங்களும், சலுகைகளும், இன்றும் அறிவித்துக்கொண்டிருக்கின்றன.

1035

ஆர்க்கிமிடிஸ்

இரா. செழியன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கப்பற்படைதான் அதிகமாக அழிந்தது. மதிற்குள்ளிருந்து பெரும் மரங்கள் கப்பல்களின் மீது வீசி எறியப்பட்டன. மரத்துண்டுகள் விழுந்த அதிர்ச்சியில் சிறு படகுகள் மூழ்கின, பாய் மரங்கள் கிழிந்து, கயிறுகள் அறுந்து கப்பல்கள் சிதறின. அடுத்தபடியாக துறைமுகத்திலிருந்து நீண்ட கம்பங்கள் கப்பல்களுக்குமேல் உயர்ந்தன. அவைகளிலிருந்து கொக்கிகள் தாழ்ந்து கப்பல்களை அப்படியே ஆகாயத்தில் தூக்கிக்கடலில் எறிந்தன. மற்றும் சில, கொக்கு மீனைத் தூக்குவது போல, கப்பல்களைக் கௌவி, நாலைந்து தரம் சுழற்றியபின் பாறைகளின் மீது கப்பல்களை வீசின. சில கப்பல்கள் ஆகாயத்தில் உயர்த்தப்பட்டு உயரத்தில் நன்ருக உலுக்கப்பட்டன. அவ்வாறு உலுக்கப்படும்பொழுது, அதனின்றும் வீரர்கள் கடலில் வீழ்ந்தனர். கடைசி மனிதன் கீழே விழுந்ததும் காலியான கப்பல் கீழே எறியப்பட்டது. மார்க்கெல்லஸ் வரும்பொழுது ஒரு சிறு இயந்திரம் கொண்டுவந்திருந்தான். அது ஏற்றி வந்த கப்பல்மீது 500-பவுண்டு எடையுள்ள கல் வேகமாக வந்து தாக்கியது. அதைத்தொடர்ந்து இரண்டாவது, மூன்ருவது என்று குறி தவருமல் அந்த இயந்திரத்தின் மீது விழுந்தன. இயந்திரம் பயன்படுத்த முடியாதபடி சிதைந்து, கப்பல் மூழ்கிவிட்டது.

மார்க்கெல்லஸின் கப்பல்களும், படைவீரர்களும் ஆர்க்கிமிடிஸின் இயந்திரங்களுக்கு முன் விளையாட்டுப் பொருள்களாகி விட்டன. எதிர்பாராத அளவுக்கு அழிவு ஏற்பட்டது. மார்க்கெல்லஸ் மனமுடைந்தான். மண்டியிடும் என்று நினைத்து வந்தான், அது மயக்கம் வருமளவுக்கு மண்டையிலடித்தது. வெகு விரைவில் படை வரிசைகளையும், கப்பற்படையையும் பின்வாங்கச் சொன்ஞன்.

படைக்குழுவினர் ஒன்று கூடி போர் நிலைமையை ஆலோசித்தனர். ஆர்க்கிமிடிஸின் இயந்திரங்களால் பெருங் கற்களை மிக உயரத்திற்கு எழுப்ப, தூரத்திருப்பவைகளைத் தாக்க முடிந்தது. எனவே மிக அருகில் சென்றுவிட்டால இயந்திரங்களிலிருந்து வெளிக்கிளம்பும் கற்கள் தலைக்குமேல்தான் போய்க்கொண்டிருக்கும். கோட்டையைப் பிளந்து உள் நுழைந்து விடலாம், இந்த முடிவுக்குப் படைக் குழுவினர் வந்தனர்.

இரவு வந்ததும் மார்க்கெல்லஸ் தன் தந்திரத்தாக்குதலை ஆரம்பித்தான். இருளில் மறைந்துகொண்டு சந்தடியின்றி ரோம்படையினர் கோட்டைச் சுவரை நெருங்கினர். "அருகில் வந்துவிட்டோம் இனி ஆபத்தில்லை" என்று பெருமூச்சு விடுகிற நேரத்தில் பெருங்காற்று இரைச்சலில் அம்புகளும், கூரிய ஆயுதங்களும் குறைந்த உயரத்தில் தாக்கின. இருட்டு என்ற போதிலும் ஆர்க்கிமிடிஸ் ஏமாந்துவிடவில்லை. எவ்வகைத் தாக்குதல்களுக்கும் எச்சரிக்கையாகவே இருந்தார். அண்மையிலுள்ளவற்றைத் தாக்க இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அம்புகளும் கூரிய ஆயுதப் பொறி சிதறுவதைப்போல கவன்கற்கள் படைவரிசையைத் துளைத்தன. அம்புகளும் கூரிய ஆயுதங்களும் ஓய்ச்சலின்றி பாய்ந்தன. இருட்டு. குழப்பமடைந்த படை வீரர்கள் இடறிவிழுந்து ஓடினுர்கள். இடறிவிழுந்து தடுமாறுபவர்களின் துன்பம் அதிகரித்தது. தேள்போன்ற பொறிகள் தம் அருகில் செல்பவரைக் கவ்விப்பிடித்து கீழே முடக்கித் தள்ளின.

படை வீரர்களுக்குக் கிடைத்த மரியாதையே, போர்க்கப்பல்களுக்கும் கிடைத்தது. கப்பல்கள் ஒன்ருேடொன்று மோதப்பட்டு

சிதைந்தன. ரோம்படையினர் இதுவரை பல போர்கள் நடத்தி வெற்றி பெற்றிருக்கின்றனர். தங்களைப் போன்ற மனிதர்களுடன் போராடி வெற்றி பெற்றனரேத் தவிர "கணக்குப் பூதத்தை" எதிர்த்து நின்றதில்லை.

"இந்த கணக்குப் பூதத்தை எதிர்த்து நிற்க நம்மால் முடியாது. கடல்நீரை முகர்ந்து வரும் கோப்பைகளாக நம் கப்பல்களை அவன் உபயோகிக்கிறான். நம்முடைய இயந்திரம் இருக்குமிடம் தெரியவில்லை. நூறு கைப் பூதம் போல எண்ணற்ற அம்புகளையும் ஆயுதங்களையும் நம்மீது வீசுகிறான்" என்று கூறி மார்க்கெல்லஸ் மனமழுங்கினான். மாவீரன் என்று மதிக்கப்பட்ட மார்க்கெல்லஸ், கால் நாட்டினரைச் சிதறடித்த படைத்தலைவன் ஹனிபாலின் படையெடுப்பை தடுத்து நின்ற போர் நிபுணன் ஆர்க்கிமிடிஸின் முன் பின் வாங்கினான். அவனது படை வீரர்களோ சிரக்யூஸ் இருக்கும் திக்கை பார்ப்பதற்கே அஞ்சினார்கள். கோட்டைச் சுவரின்மேல் கயிறு தொங்கினாலும் கம்பம் தலைதூக்கி நின்றாலும் போதும், படைவீரர்களுக்கு அச்சம் பிறந்துவிடும். "ஆர்க்மிடிஸின அபாய இயந்திரங்கள் நம்மைக் குறிபார்க்கின்றன" என்று அலறி ஓடி விடுவார்கள். தாக்குதலால் பிடிக்க முடியாது என்று கண்ட மார்க்கெல்லஸ் நீண்டகால முற்றுகையால் அந்நகரைப் பணியவைக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். படை பலமிக்க பெரும் மண்டிலங்கள் நொடிப்பொழுதில் ரோம்படையினர் முன் சாய்ந்தபோதிலும், சிறுநகரான சிரக்யூஸ் ஆர்க்கிமிடிஸின் ஆற்றலால் அடிபணியாது நின்றது. மூன்றாண்டுகளாகியும் முற்றுகை வெற்றி பெறவில்லை. 'சிரக்யூஸ் நகரைத் தாக்கிப் பிடிப்பது முடியாது என்று கண்டவுடன் சிசிலித்தீவின் மற்ற பகுதிகளை ஒவ்வொன்ருகத் தன் ஆதிக்கத்தின் கீழ் மார்க்கெல்லஸ் கொண்டுவந்தான்.

சிரக்யூஸ் நகரிலிருந்து வெளியேற முயற்சித்த ஒருவன் மார்க்கெல்லஸ் வீரர்களால் போர்க் கைதியாக்கப்பட்டான். பணம் கொடுத்து அவனைத் திரும்பவும் பெற்றுக் கொள்ள சிரக்யூஸ் நகரத்தினர் விரும்பினர். அதற்காக மார்க்கெல்லஸ்ஸும், சிரக்யூஸ் நகரப் பிரதிநிதிகளும் பேச்சு வார்த்தை நடத்தினர். அவ்வாறு சிரக்யூஸ் நகரப் பிரதிநிதிகளை மார்க்கெல்லஸ் சந்திக்கும்பொழுது கோட்டையின மூலை சரியாகப் பாதுகாக்கப்படாமல் அரண் அழிந்து இருந்ததைப் பார்த்தான்.

சிரக்யூஸ் நகரம் ஆண்டுதோறும் கொண்டாடும் விழாவொன்றில் ஈடுபட்டிருந்தது. நகரெங்கும் ஒரே கொண்டாட்டம். பகலில் வேடிக்கை விளையாட்டு, பந்தயம் முதலியன நடைபெற்றன. வாண வேடிக்கை, பாட்டு கூத்து, உயர்தர விருந்து, மட்டற்ற மது இவைகளுடன் இராப்பொழுது கழிந்தது.

காலை கண்விழித்தது. நகரமக்கள் கண் விழிக்கவில்லை, அரைத் தூக்கத்திலிருந்தனர்.

சத்தம் கேட்டது, புரண்டு படுத்தனர்.

மறுபடியும் சத்தம் வந்தது. இரவு கேட்ட மத்தளத்தை நினைத்து உதட்டைப் பிதுக்கினர். உதட்டிலே காய்ந்த மது கசந்தது.

மீண்டும் சத்தம். இத்தடவை அலட்சியப் படுத்த முடியவில்லை. உற்றுக் கேட்டனர். போர் முழக்கம் கேட்டுத் திடுக்கிட்டனர்.

ரோம் வீரர்கள் கோட்டைக்குள் நுழைந்து விட்டனர்.

நான்கு திக்கிலும் அவர்களது போர் முரசே ஒலித்தது.

சிரக்யூஸ் நகரம் விழாவில் மயங்கியிருந்த நேரத்தில், பாதுகாப்புக் குறைந்திருந்த கோட்டைப் பகுதியின் வழியாக இரவில் மார்க்கெல்லஸ் தன் படை வீரர்களை நகருக்குள் அனுப்பி விட்டான். காலையில் நாலா பக்கத்திலும் போர் முழக்கம் வருவதைக் கேட்டு மக்கள் நகர் வீழ்ந்துவிட்டது என குழப்பமடைந்தனர். பாதுகாப்புடைய மற்றப் பகுதிகளும் ரோம் படை வீரர்களால் கைப் பற்றப் பட்டன.

ஒரு உயர்ந்த இடத்திலிருந்து கைப்பற்றப் பட்ட நகரை மார்க்கெல்லஸ் பார்வையிட்டான். காலைக்கதிரவன் அவிழ்த்து விட்ட பொன்னொளியில் சிரக்யூஸ் அழகு நகராகக் காட்சியளித்தது.

மூர்க்கக் குணம் படைத்த போர் வீரர்களால் அதன் எழில் சிறிது நேரத்திற்கெல்லாம் அழிந்து விடும்! ஒளி விட்ட அழகையும், ஊசலாடிய அழிவையும் நினைத்தபொழுது மார்க்கெல்லஸே கண்ணீர் விட்டான் என்று கூறப்படுகிறது. கொள்ளையடிக்கப் போர் வீரர்கள் துடிதுடித்தனர். தீயிட்டுப் பொசுக்கித் தரை மட்டமாக்க வேண்டுமென்று படைத் தலைவர்கள் விரும்பினர். உயிருக்குச் சேதம் விளைவிக்காமல் பொருளையும், அடிமைகளையும் கவர்ந்துகொள்ள மார்க்கெல்லஸ் அனுமதி கொடுத்தான்.

கீர்த்திசால் சிரக்யூஸ் நகர் மீது அழிவு ஆரவாரித்தது. கொடுமையும், தீயும், கொள்ளையும், கொலையும் ரோம் படையினருடன் நகருக்குள் நுழைந்தன. கிரேக்க நாகரிகத்தின் பண்பாடுகள் அழிக்கப்பட்டன. அத்துடன் அந்நகரில் ஒளிவிட்டுக்கொண்டிருந்த அறிவுச் சுடரும் அன்று அணைக்கப்பட்டது.

கண்ட பொருள்களைக் கவர்ந்தும், எதிர்ப்பட்டோரை அடிமை கொண்டும், ஏறிட்டுப் பார்த்தோரை வெட்டி வீழ்த்தியும் ரோம் படையினர் திரிந்தனர். கல்நெஞ்சினருடன் கழுகுக் கூட்டமும் நகரைச் சுற்றி வட்டமிட்டது. வாள் தங்கு தடையின்றி வீசப்பட்டது.

சிரக்யூஸ் நகர் பிடிபட்டது ஆர்க்கிமிடிஸுக்குத் தெரியாது. வழக்கம்போல் கணித ஆராய்ச்சியில் அவர் ஆழ்ந்திருந்தார். கோவென்ற ஒலியும், கூக்குரலும், கதறலும் அவர் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அழிவு ஊட்டிய அலங்கோலத்தின் முன் அமைதி இழக்காத மனிதராக ஆர்க்கிமிடிஸ் விளங்கினார். தன் வீட்டு முன் வாயலில் காலைக் கதிரவனொளியில் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார். தரையில் அமர்ந்து, மணலில் படங்களைத் தீட்டி அதில் ஈடுபட்டிருந்தார். அவரது ஆழ்ந்த கவனம் அப்படங்களின் மீது விழுந்த நிழலால் கலைந்தது. நிழலைக் கண்டதும், வெயிலைத் தடுத்த மனிதனை "தூரப்போ. என் படங்களை இருண்டதாக்காதே" என்று அதட்டினார். சாதாரண மனிதனாயிருந்தால் விலகியிருப்பான். முரடனாயிருந்தால் கூட முதியவரின் வார்த்தைக்கு மதிப்பளித்திருப்பான். ஆனால் இவன் சாமான்யனல்லன் படைவீரன். ஆர்க்கிமிடிஸ் கூறியதும் நகரவில்லை, தன் வாளை வீசினான். ஆர்க்கிமிடிஸ் மண்ணில் துவண்டார். மணலில் அவர் எழுதிய கோடுகளின்மீது இரத்தம் பாய்ந்தது.

அவர் இறந்தது குறித்து மாறுபட்ட வரலாறுகளும் வழங்குகின்றன. மார்க்கெல்லஸ் அவரை அழைத்து வரச் சொன்னதாகப் போர் வீரன் ஒருவன் கூப்பிட்டதாகவும், தான் எடுத்துக்கொண்ட கணக்கை முடித்துவிட்டுதான் வர முடியும் என்று ஆர்க்கிமிடிஸ் பதிலளித்ததாகவும் அதனால் கோபங்கொண்ட போர் வீரன் அவரைக் கொன்றதாகக் கூறப்படுகிறது.

அவரைக் கொல்வதற்குப் போர் வீரனொருவன் ஓடிவந்தபோது, தான் எடுத்துக்கொண்ட கணக்கை முடிக்கும்வரைத் தன்னை விட்டு வைக்குமாறு ஆர்க்கிமிடிஸ் வேண்ட அதைப் பொருட்படுத்தாது அப்புல்லன் அறிஞரை வெட்டி வீழ்த்தினான் என்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது. "கணக்குப் பொம்மைகளான" முப்பட்டை, நாற்பட்டை, அறுபட்டை, மரக்கட்டைகள், முதலியவைகளை மூட்டையில் அவர் எடுத்துப் போனதைப் பார்த்த ரோம் வீரன் படைக்கலங்களை ஒளித்துச் செல்கிறார் என்ற எண்ணத்தின் மீது அவரை வெட்டினான் என்று பிறிதொரு வரலாறும் இருக்கிறது. பல திறப்பட்ட முடிவுகள் தரப்பட்ட போதிலும், ஆர்க்கிமிடிஸ் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபொழுது படை வீரர்களால் கொல்லப்பட்டார் என்பது தெளிவு. ஆர்க்கிமிடிஸ் இறந்தது கி.மு. 212ல் அப்பொழுது அவருக்குவயது 75. உருண்டை அதே உயரமும் அகலமுமுள்ள சிலிண்டர் இரண்டின் மேற்பரப்பும், பருமனும் ஆர்க்கிமிடிஸால் கண்டு பிடிக்கப்பட்டு, இரண்டு உருவங்களுக்குமுள்ள தொடர்பு எளிதில் தரப்பட்டது. இந்த ஆராய்ச்சியில், தான் பெற்ற வெற்றியை ஆர்க்கிமிடிஸ் பெரிதும் போற்றினார். அதன்படி, தான் இறந்ததும் தன் புதைகுழி மீது உருண்டையும் சிலிண்டரும் கூடிய உருவம் பொறிக்கப் படவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அவர் இறந்ததும் அவர் விருப்பப்படி புதைகுழிமீது உருண்டை சிலிண்டர் உருவம் பதிக்கப்பட்டது.

* * *

சிரக்யூஸ் நகர் பிடிபட்டு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகியது. ஒரு தடவை அழிந்தபின் அது மீண்டும் உயிரடையவில்லை சிசிலித்தீவு, அதில் சிரக்யூஸ் சிற்றூராகக் காணப்பட்டது அதன் பெருமையும், வரலாறும் எல்லோராலும் அநேகமாக மறக்கப்பட்டிருந்த சமயத்தில், ரோம் நகரத்தின் பேச்சாளராகப் புகழ்பெற்ற சிசரோ என்பவர் கி. மு. 75-ல் சிசிலித்தீவுக்கு வந்தார். சிசரோ சிறந்த அறிஞன், பெரும் படிப்பாளி. சிரக்யூஸ் நகரத்தின் பெருமையையும், அதில் வாழ்ந்த அறிஞரைப்பற்றியும் அவர் படித்திருக்கிறார். சிசிலித்தீவுக்கு வந்து சிரக்யூஸ் நகருக்குப் போனார்.

சிரக்யூஸ் சீரழிந்தது என்று படித்திருக்கிறார். ஆனால் சிதைவை நேரில் பார்த்தபொழுதுதான் அதன் அளவு சிசரோவுக்குப் புரிந்தது. தூர்ந்த அகழ், இடிந்த மதில், சரிந்த மாடங்கள் பாழடைந்த, துறைமுகம், கல்லும் முள்ளும் நிரம்பிய பாதைகள் அங்கு வாழ்ந்த மக்களின் தோற்றமும், மனப்பாங்கும் கூட சிறுமைப்பட்டிருந்தன. அதன் அழிந்த

நிலை சிசரோவுக்கு அளவற்ற வருத்தத்தைக் கொடுத்தது. கடைசியாக ஆர்க்கிமிடிஸின் புதைகுழியைப் பார்த்துப் போக விரும்பினார். எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவ்வூரிலிருந்த முக்கியமானவர்களை அழைத்து அவர்களைக் கேட்டார். அவர்களுக்கு சிசரோ கேட்பதே புரியவில்லை. ஆர்க்கிமிடிஸ் என்ற பெயர் கொண்டவர் அங்கு வாழ்ந்தது கிடையாது என்று சிசரோவைச் சிலர் மறுத்தனர்.

ஆர்க்கிமிடிஸின் புதை குழிமீது உருண்டையும் சிலிண்டரும் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதைச் சிசரோ படித்திருக்கிறார். அதை அவர்களின் கவனத்துக் கொண்டு வந்தார். அந்தப் பக்கத்தில் அதுமாதிரி எதுவும் கிடையாது எனச் சாதித்தனர்.

புதைகுழிமீது எழுதப்பட்டிருந்த பாட்டை சிசரோ படித்திருக்கிறார். அதை ஞாபகத்திலிருந்து சிசரோ சொன்னார். செய்யுள் நன்றாயிருந்தபோதிலும், அது சிசிலித்தீவிலேயே அதற்கு முன் கேள்விப்படாதது என்று சிரக்யூஸ்மக்கள் ஒரு முகமாகக் கூறினார்கள்.

பெருமையின் உச்சியிலிருந்து பின் வீழ்ச்சியுற்ற நகரின் பாழடைந்த தோற்றங்கூட பரிதாபத்தை உண்டாக்கவில்லை. அந்த இடத்தில் வசிப்பவர்களே அதன் பெருமைகளை உணராத வகையில் மனம் பாழடைந்து காணப்பட்டதே சிசரோவுக்கு வருத்தத்தை உண்டாக்கியது. அவர்களைக் கேட்டும் பயனில்லாததால், தானே பாழடைந்த இடங்களில் சுற்றி ஆர்க்கிமிடிஸ் புதைகுழியைக் கண்டு பிடிக்க முற்பட்டார்.

கல்லும் முள்ளும் செறிந்த இடம். முட்செடிகள் குவிந்து, கவனிப்பாரற்று, காலடி வைக்க முடியாதபடி பாழடைந்த சிறு பகுதி அதன் மத்தியில் உருண்டையும், சிலிண்டரும் காட்சியளித்தன. ஆவலோடு அதனருகில் சிசரோ ஓடினார். முயற்சி வீண் போகவில்லை. ஆர்க்கிமிடிஸின் கல்லறையே அது! அதன் மீது எழுதப்பட்டிருந்த பாட்டு பகுதி அழிந்திருந்தது. தான்முன்பு படித்த பாட்டு அதனுடன் ஒத்திருந்தது. கல்லறையின் எதிரே சிசரோ நின்று, அதனையே உற்றுநோக்கினார். அதன் பாழடைந்த நிலை அவர் கண்களில் நீரைத் தேக்கிற்று. "கிரேக்க நாகரிகத்தின் உயர் நகர், கல்வி கேள்விகளின் இருப்பிடமாக விளங்கிய பேரூர் அழிந்து கிடக்கிறது. அதனுடைய அறிஞர் — அளவிடற்கரிய பேரறிவு படைத்தவர், அவருடைய நினைவுச் சின்னத்தைப்பற்றி சிறிதுகூட அப்பகுதியில் இருப்பவர்களுக்குத் தெரியவில்லை. அதைக் கண்டு பிடிக்கத் தொலை தூரத்திலிருந்து இத்தாலி நாட்டிலிருந்து ஒருவன் வரவேண்டியிருக்கிறது" என்று சிசரோ கனிந்து கூறினார்.

ஆர்க்கிமிடிஸைத் தொடர்ந்து அவரது ஆராய்ச்சிகள் முன்னேற்ற மடையவில்லை. பெயர் மறக்கப்பட்டு விட்டது என்றே கூறலாம். ரோம் படையெடுப்புக்குப் பின் கிருஸ்துவ மதம் பரவியது. பின் காட்டுமிராண்டிகளின் படையெடுப்பு, மூர்ஜாதியினர் எழுச்சி சிலுவைச் சண்டை மதக் குருமார்களின் ஆட்சி இவை ஒன்றனபின் ஒன்றாகத் தாக்கின. விஞ்ஞானம் அடங்கி யிருந்தது. ஆர்க்கிமிடிஸ் கல்லறையில் படுத்திருந்தார். காலம் மாறியது. மறுமலர்ச்சி வந்தது. இருண்ட ஐரோப்பாவில் அறிவொளிவீசியது. 'ஆர்க்கிமிடிஸ்' மறுபடியும் எழுந்து 'உலவினார்!

(முடிவுற்றது)

மனங்குழம்பியவர்: இரண்டு பெண்கள் என்னைக் காதலிக்கின்றனர். ஒரு பெண் மிக அழகானவள் அவளைத்தான் நான் விரும்புகின்றேன். ஆனால் அவள் பரம ஏழை. மற்றொரு பெண் விதவை; என்றாலும் பெருஞ்செல்வம் படைத்தவள்.

அறிவுரைப்பவர்: என்ன செய்வது என்பது உனக்குப் புரியவில்லை?

மனங்குழம்பியவர்: ஆமாம்! யாரை நான் மணந்துகொள்வது?

அறிவுரைப்பவர்: உண்மையான காதலை நீ புறக்கணித்தல் கூடாது. நீ காதலிக்கும் அந்த ஏழைப் பெண்ணை நீ மணப்பதுதான் சரியென்று சொல்வேன்.

மனங்குழம்பியவர்: ஆமாம்! அப்படித்தான் செய்யவேண்டும்.

அறிவுரைப்பவர்: சந்தோஷம்! ம்...வந்து, அந்த விதவைப் பெண்ணின் முகவரியென்ன?

கண்ணுறக்கமும் வருமோ?

[எழினி]

✯

தலைவி தன் மனதிற்குகந்த தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, களவொழுக்கத்திலே காதலின்பம் நுகர்ந்து வருகிறாள்.

தோழி தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே தூது சென்று வருவதும், இரவுக்குறி பகற்குறியிடங்களை உறுதிப் படுத்துவதும், குறியிடங்களுக்குத் தலைவியை இட்டுச்செல்வதும், தலைவனும் தலைவியும் அளவளாவி மகிழ்ந்து இருக்கும்போது அவர்களை உற்றார், உறவினர், ஊரார் கண்டு கொள்ளாதபடி பாதுகாத்து வருதலும் ஆன செயல்களை மனமகிழ்ச்சியோடு நிறைவேற்றி வருகிறாள்.

தலைவன் களவொழுக்க இன்பத்தைத் தொடர்ந்து நுகர்ந்து கொண்டிருப்பதிலே, கட்டுக்கடங்காப் பேராவலுடையவனாகிக் களவொழுக்கத்தை நீடித்துக்கொண்டிருக்கிறான்.

தலைவியின் பெற்றோர்கள் தம் மகள் மணத்திற்குரிய பருவம் எய்திவிட்டாளாகையால், அவளை வெளியே மிகவாக நடமாட விடாமல், வீட்டிற்குள்ளேயே இருக்கும்படி செய்து, தக்க மணமகன் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதிலே ஆழ்ந்த கவலை செலுத்தி வருகிறார்கள்.

தன்னை நன்கு ஒப்பனை செய்துகொண்டு அடிக்கடித் தோழியுடன் வெளியே சென்று வருவதில் தலைவி மிகத்துடி துடிப்புடையவளாக இருப்பதைத்தாய் கவனிக்கிறாள். மகள் எங்கேயோ அடிக்கடி போகிறாள், அதுவும் வெளியே போவதென்றால் சீவி முடித்துச் சீர் செய்துகொண்டு போகிறாள், வெளியே போவதென்றால் ஆட்டமும் பாட்டமும் மகிழ்ச்சியும் அவளிடத்தில் குதிகொள்கின்றன, இவற்றிற்கெல்லாம் காரணம் அவள் யாரேனும் கட்டிளங்காளையோடு நட்புறவுகொண்டிருப்பாளோ என்று தாய் ஐயமுறுகிறாள். மகளுடைய நடைஉடை நடிப்பு தாயாரின் ஐயத்தை நாளுக்கு நாள் வலுப்படுத்துகின்றன. தெளிவான சான்று எதுவும் இல்லாமல் அதுபற்றி மகளை எப்படிக் கேட்பது என்று தாய்க்குப் புலப்படவில்லை. எதற்கும் மகளை வெளியே போகவிடாமற் தடுத்து வீட்டிலே இருக்கும்படி செய்து விடுவது நல்லது என்ற முடிவுக்குத் தாய் வருகிறாள். தக்க பருவம் எய்திவிட்ட படியால், இனி வீட்டை விட்டு வெளியே எங்கும் போகக் கூடாது என்ற கடுமையான கட்டளையை மகளுக்கு இடுகிறாள் தாய். தலைவியை எங்கும் அழைத்துச் செல்லக்கூடாது என்று தோழிக்கும், தலைவி வெளியே செல்லாதவாறு காவல் காக்கும்படி செவிலித்தாய்க்கும் நற்றாய் கட்டளைகள் பிறப்பிக்கிறாள்.

நற்றாயின் கட்டளைக்கேற்ப தலைவி வீட்டிலேயே இருக்கவேண்டியவளாகிறாள். என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல், தலைவி இரவுக்குறியிடத்துக் காண்பதாகச் சொல்லிவிட்டு வந்து விட்டோமே, தலைவனை இனிக் காணமுடியாமற் போய் விடுமே, தலைவன் என்ன எண்ணிக் கொள்வானோ, தன்னை இனி வெறுத்தொதுக்கி விடுவானோ என்றவாறெல்லாம் எண்ணி எண்ணி தலைவி மனம் புழுங்குகிறாள். வழக்கம்போல் இரவுக் குறியிடத்துக்கு யாரும் அறியா வண்ணம் நழுவிப்போக முடியாதபடி செவிலித்தாயின் கட்டுக்காவல் மிகுத்திருப்பது கண்டு கலங்கினாள். தலைவனைக் காணுவதற்கான எளிய வழி, ஏதேனும் ஒன்று சொல்லித்தரும்படி தலைவி தோழியை வற்புறுத்தி வற்புறுத்திக் கேட்கிறாள். செவிலித்தாயின் கண்காணிப்பு மிக மும்முரமாக இருக்கும்போது, வெளியே போவதற்கான வாய்ப்பு அவ்வளவு எளிதில் கிடைக்கப்பெறாது என்று தோழி கூறுகிறாள்.

செவிலித்தாய், காவலின் நிமித்தம் தலைவியின் அருகே, வெளிவாயில் அடைபட படுத்துக்கொண்டிருக்கிறாள். தலைவியும் தோழியும் தமக்குள் ஒருவரோடொருவர் செவித்

தாயின் காதுக்கு எட்டாமல் குசுகுசு என்று பேசிக்கொண்டும், நல்ல உறக்கங்கொள் வதைப்போல் நடித்துக்கொண்டும் ஆழ்ந்த கவலையில் அமிழ்ந்திருக்கின்றனர்.

இரவுக்குறி நேரமும் வருகிறது. கடந்து செல்கிறது. தலைவன் இரவுக்குறியிடத் திற்குச் சென்று தலைவியின் வருகைக்குக் காத்திருக்கிறான். இரவுக்குறி நேரம் வந்து சென்று நீண்ட நாழிகை ஆனபிறகும் தலைவி வாராமைகண்டு மிகவும் வருந்திக் கலங்கு கிறான். தலைவிக்கு வழியில் ஏதேனும் தீங்கு ஏற்பட்டு விட்டதோ, அல்லது ஊரார் யாரும் அவளது களவு நடவடிக்கையைக் கவனித்து விட்டார்களோ அல்லது அவளது பெற்றோர் கள் அவளை வீட்டிலேயே இருத்திவைத்து விட்டார்களோ என்றெல்லாம் நினைந்து நினைந்து வருந்துகிறான். பொழு துவிடியுங் காலம்வரையில் காத்திருந்த தலைவன், பகற் பொழுதில் தலைவியின் இருப்பிடம் சென்று உண்மையை அறிந்து கொள்ள முயலலாம் என்ற முடிவோடு தன் இல்லம் நோக்கித் திரும்புகிறான்.

இரவுக்குறி நேரம் வந்து போய்விட்டது, தலைவனைக் காண்பதைத் தவற விட்டுவிட்டோம் என்று எண்ணிடும் போதெல்லாம் தலைவியின் நெஞ்சு துடிதுடிக்கத் துவங்கி விடுகிறது. தலைவன்பால் அவள் கொண்ட காதல் வேட்கை மிகுதியுற்று அவளது ஆசைப் பெருக்கமானது அவளைத் துன்புறுத்த, அவள் உடல் வெப்பமுறுகிறது. காதல் வெப்பத்தால் துடிதுடிக்கும் அவள் பெருமூச் செறிகிறாள். அம்பால் அடிபட்டு வீழ்ந்த பெண்மான் எப்படிப் பெருமூச்சு வாங்கி விடுமோ, அப்படித் தலைவி பெருமூச்செறி வதைச் செவிலித்தாய் உற்றுக் கவனிக்கிறாள்.

"என் அருமை மகளே! இன்னமும் நீ தூங்கவில்லையா? ஏன் இப்படிப் பெருமூச் செறிகிறாய்?" என்று செவிலித்தாய் தலைவி யைக் கேட்கிறாள்.

செவிலித்தாயின் இந்தச் சொற்றொடர் களைக் கேட்டவுடன், தலைவி, மிகத் தொல்லைப் பட்டுப், பெருமூச்செறிவதை அடக்கிக் கொண்டு, உறங்குவதுபோல் நடிப்பு செய்யத் தொடங்குகிறாள். தலைவி நன்கு உறங்குவது போல் இருப்பதைக் கண்டுகொண்ட செவிலி மகள் ஏதோ தூக்கக் கலக்கத்தில் புலம்பு கிறாள்போலும் என்று நினைத்துக்கொண்டு அந்த அளவிலே அமைந்து விடுகிறாள். தலைவி, தலைவன்மீதும், அவன் உடல் வனப்பு மீதும் செல்வச் செழிப்புமீதும், வளங்கொழிக் கும் அவனது மலைமீதும், அதில் பொழியும் மிக்க மழைமீதும், அதில் செழித்து வளரும் சிச்சிலிப்பறவையின் வாய்போன்ற அரும்பு களையுடைய முல்லை மலர்கள் மீதும், செறிந்து வளர்ந்த அவனது காடுமீதும், அதன் பள்ளங்களில் தேங்கிக்கிடக்கும் மணிகள் மீதும், இவையெல்லாம் சேர்ந்த அவனது நாட்டின் மீதும் தன் எண்ணத்தை அலைய விட்டுக்கொண்டு, அசையாமல் அப்படியே படுத்துக்கொண்டு, தான் சொல்வது வெளியே தெரியாதபடி, தன் நெஞ்சிற்குத் தானே சொல்லிக்கொள்வதுபோல், "அப்ப டிப்பட்ட தலைமகனை விரும்பி எண்ணியிருப் போர்க்குக் கண்ணுறக்கம் வேறு வருமோ?" என்று சொல்லிக்கொள்கிறாள். அருகே படுத்திருக்கும் தோழி அதற்குள் நன்கு உறங்கி விடுகிறாள். சரியான தூக்கம் இல்லாத நிலையிலேயே தலைவி இரவுப்பொழுதைக் கழிக் கிறாள்.

பொழுது விடிந்தபிறகு தோழியும் தலைவி யும் தனியாகப் புறக்கடையில் உலாவச்செல் லும்போது, தலைவி, இரவில் தனக்குத்தூக்கம் வராமல் போனதைப் பற்றியும், தலைவன்பால் கொண்ட காதல் வேட்கை மிகுதியினால் தான் துன்புற்று, வெப்பமுற்றுப், பெருமூச்செறிந்த தையும், "இன்னமும் தூங்கவில்லையா?" என்று செவிலி கேட்டதையும், தான் விடை ஏதும்பகராமல் அப்படியே அசைவற்று உறங்குவதைப்போல் நடிப்புச் செய்ததையும், தன்நெஞ்சம் தலைவனைப் பற்றிய நினைவுகளில் அலைந்து திரிந்ததையும், "தலைவனை விரும்பி எண்ணியிருப்போர்க்குக் கண்ணுறக்கம்வேறு வருமோ?" என்று தனக்குள்ளே தானே சொல்லிக் கொண்டதையும் தோழியிடம் விளக்கமாக எடுத்துக்கூறினாள். தலைவியின் நிலைமையையும், உள்ளக்கிடக்கையையும் நன்கு அறிந்துகொண்ட தோழி, தலைமகனை எவ்வாறேனும் வற்புறுத்தித் தலைவியை விரைவில் மணந்து கொள்ளும்படி தூண்ட வேண்டும் என்று முடிவு செய்துகொள்ளு கிறாள்.

தலைவியைப் பற்றிய நிலையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு பொழுது புலர்ந்ததும், தலைவன் தலைவியின் வீடுநோக்கி ஒளிந்து, மறைந்து, அஞ்சி வரு கிறான். தலைவியும் தோழியும் புறக்கடைத் தோட்டத்தில் தனியே உரையாடிக்கொண் டிருப்பதைப் பார்த்துவிட்டு, ஒரு மரத்தின் அடியில் ஒளிந்து நின்று, அவர்கள் பேசிக் கொள்வதை உற்று நோக்கிக் கேட்க முயலு

கிறான். தலைவன் மறைவாக வந்திருப்பதையும், மரத்தடியில் ஒளிந்து நின்று உற்றுக் கேட்பதையும் கடைக்கண்ணால் கண்டு கொண்ட தோழி, தலைவியிடம் சிலபல வினாக்களை எழுப்பித் தலைவியை, நற்றாய், காவலில் வைத்துவிட்ட செய்தி பற்றியும், இரவில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும் தலைவியின் வாயிலிருந்து வரும்படி செய்கிறாள்.

தோழி--தலைவி ஆகியோரின் உரையாடலைக் கேட்ட தலைவன், தலைவியின் நிலைமையையும், அவளது உள்ளக்கிடக்கையையும், அவள் தன்மீது கொண்டிருக்கும் மட்டற்ற காதலன்பையும், தான் விரைவில் திருமணம் செய்து கொள்ள முன்வர வேண்டுமென்றே அவள் விரும்புகிறாள் என்பதையும் அறிந்துகொள்கிறான்.

"திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டு வந்து, தலைவியைக் காண்பேன்" என்ற முடிவோடு தலைவன் அவ்விடம் விட்டு அகல்கிறான்.

* * *

இது, நற்றிணை 61-ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கித் தீட்டப்பட்டுள்ள சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் குறிஞ்சித்திணையின்பாற் பட்டுத்தலைவன் வரவுணர்ந்து தலைவியைத் தோழி தானாகக்கொண்டு சொல்லுவாளாய்ச் சொல்லியது என்னும் பிரிவின்பாற்பட்டதாகும். இந்தச் செய்யுளை இயற்றிய ஆசிரியர் சிறுமோலிகனார் என்ற சங்கப்புலவராவார். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. இவர் பாடிய செய்யுட்களிலே இது ஒன்றுதான் கிடைக்கப் பெற்றுள்ளது.

கேளாய் எல்ல தோழி! அல்கல்
வேணவா நலிய வெய்ய உயிரா
ஏமான் பிணையின் வருந்தினென் ஆகத்
துயர்மருங் கறிந்தனள் போல அன்னை
துஞ்சா யோவென் குறுமகள் என்றலில்
சொல்வெளிப் படாமை மெல்லவென் நெஞ்சில்
படுமழை பொழிந்த பாறை மருங்கில்
சிரல்வா யுற்ற(து) அளவில் பரலவல்
கான்கெழு நாடன் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ என்றிசின் யானே.

[நற்றிணை-61]

பொழிப்புரை: ஏடீ! தோழீ! நான் கூறுகின்ற இதனைக் கேட்பாயாக! நேற்றிரவில் வேட்கை 'மிகுதியாலுற்ற' ஆசைப் பெருக்கமானது, துன்புறுத்தலாலே வெப்பமாகப் பெருமூச்செறிந்து அம்புபட்ட மான் பிணைபோல வருத்தமடைந்தேனாக, அப்பொழுது அன்னை யானுற்ற துன்பமிகுதியை அறிந்தாள்போல, என்னை நோக்கி, "என்னிளமகளே! நீ தூங்கவில்லையா?" என்றதும், யான் சொல்லுவது வெளியே தெரியாதபடிமெல்ல என்னெஞ்சினுள்ளே, "மிக்க மழை பொழிந்த கற்பாறையருகிலே பூத்த, சிச்சிலிப் பறவையின் வாய்போன்ற அரும்புகளையுடைய முல்லையும், மணிகள் நிரம்பிய பள்ளங்களுமுடைய விளங்கிய காடு சூழ்ந்தநாட்டையுடைய தலைமகனைக் கருதியிருப்போர்க்குக் கண்ணுறக்கமும் வருமோ" என்றேன் காண்!

[அல்கல்-இரவு; வேணவா-வேட்கை மிகுதியாலுற்ற ஆசைப்பெருக்கம்; நலிய-துன்புறுத்த; ஏமான்பிணை-அம்புபட்ட மான்பிணை; சிரல்-சிச்சிலிப்பறவை; பரல்-கல்; மணி.]

கள்ளொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவி, தன்னை விரும்பும் காதலன் விரைவில் தன்னை மணந்து கொள்ளவேண்டும் என்பதில் எவ்வளவு துடிதுடிப்பு உள்ளவளாக விளங்குவாள் என்பதையும், தலைவனை பிரிந்துவாழ நேரிடும்போது எவ்வளவு துன்பமுறுவாள் என்பதையும் இச்செய்யுள் அழகுபட விளக்கிக்காட்டுகிறது.

ஆசைப் பெருக்கத்தால், உடல் வெப்பமுற்றுத் தலைவி பெருமூச்செறிகிருள் என்பதும்; அதனைக் கண்ட அன்னை "இன்னமும் தூங்கவில்லையா?" என்று கேட்டாள் என்பதும்; அதற்குத் தலைவி வாய்விட்டு மறுமொழி கூருமல், தனக்குள்ளேயே "எப்படிக் கண்ணுறக்கம் வரும்?" என்று முணுமுணுத்துக்கொண்டாள் என்பதும் நயப்பாடு நிறைந்தவையாகும்.

தலைவி வெப்பத்தால் பெருமூச்செறிவதற்கு, அம்புபட்ட மான் பெருமூச்செறிவதை உவமையாக்கி கூறியிருப்பது நினைந்து மகிழ்வதற்குரியதாகும். முல்லையின் அரும்புகளுக்குச் சிச்சிலிப்பறவையின் வாயை உவமையாக்கிக் கூறியிருப்பதும் மகிழ்ச்சி பயப்பதாகும்.

★

ஒருநாள் காலையில், ஒரு கணவனும் மனைவியும் ஏரிக்கு அப்பாலுள்ள நகர் ஒன்றை அடைய, ஏரியைப் படகால் கடந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் இருவரும் பெயருக்குத்தான் கணவன் மனைவியரே யல்லாமல், உண்மையில் பெரும் பகைவர்களாகவே காலந்தள்ளி வந்தனர். பெரும்பொழுது அவர்களிருவரும் சண்டை சச்சரவுகளில் தான் ஈடுபட்டிருப்பது வழக்கம். அவர்கள் சண்டையிடாமல் இணைந்துஇருக்கும் நேரம்மிகச் சிலவாகவே யிருக்கும், அப்படிப்பட்ட அமைதி நிலவும் ஒரு நேரத்தில்தான் இருவரும் வெளியூருக்குப் பயணம் கிளம்பினர்.

படகு சென்றுகொண்டிருக்கும்போது, ஒரு ஆண் வாத்தும் பெண் வாத்தும் அன்புடன் இணைந்து நின்று அழகாக, அமைதியாக ஏரியில் நீந்திக்கொண்டிருப்பதை மனைவி பார்த்தாள். அவள், தானும் கணவனும் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு வாழ்வதை நினைவில் வைத்துக்கொண்டு, "அத்தான் அதோ பாருங்கள், இரண்டு ஆண்-பெண் வாத்துக்கள், எவ்வளவு அமைதியாகவும், அழகாகவும் இணைந்திருந்து மெல்ல நீந்திச் செல்கின்றன! அவற்றைப்போல் மக்களும் அமைதியாக வாழக்கற்றுக் கொண்டால், வாழ்க்கை, எவ்வளவோ இனிமையாகவும், அழகாகவும் வியப்புக்குரியதாகவும் இருக்குமல்லவா?" என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

கணவன், மனைவியின் கூற்றுக்கு யாதொரு மறுமொழியும் பகராமல், படகை ஓட்டிச் செல்வதிலே கவனத்தைச் செலுத்துபவன்போல் இருந்து விட்டான்.

மாலை நேரம் வந்ததும் அவர்கள் இருவரும் அதே படகின் மூலம் வீடு நோக்கித் திரும்பினர்.

காலையில் பார்த்ததைப்போல், ஒரு ஆண் வாத்தும் பெண் வாத்தும் இணைந்திருந்து மெல்ல நீந்திச் செல்வதை மனைவி பார்த்தாள். மீண்டும் அந்தக் காட்சியைத் தன் கணவனுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்று கருதிய அவள், கணவனைப் பார்த்து, "அத்தான்! பாருங்கள் அதோ, இரண்டு வாத்துகளும் இணைந்து நின்று எப்படி நீந்திச் செல்லுகின்றன என்பதை! அவற்றைப்போல் இணைந்து வாழ, மக்களும் தலைப்பட்டால், அது எவ்வளவோ அழகாகவும்' இனிமையாகவும் இருக்கும் அல்லவா?" என்று கேட்டாள்.

கணவன் உடனே அவளைப் பார்த்து, "பெண்ணே! அவற்றின் அருகே சென்று அவற்றை நீ உற்றுப் பார்த்தால், காலையில் நீ பார்த்த ஆண் வாத்து அல்ல அது என்பதை உணர்ந்து கொள்வாய்!" என்று கூறினன்.

கார்னீலின் இரகசியம்

[செல்வன்]

பிரான்செத் மமாய், குழல் ஊதும் கிழவன். அடிக்கடி என்னிடம் வருவான். நாங்கள் இருவரும் ஒயின் குடித்து, குழல் ஊதிப் பொழுது போக்குவது வழக்கம். இருபது ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் இருக்கும் இந்தப் பழைய கட்டிடத்தில் நடந்த துயரக் கதை ஒன்றை நேற்றிரவு அவன் சொன்னான். அவன் வார்த்தைகள் என் உள்ளத்தைத் தொடுவனவாக இருந்தன. அவற்றை அப்படியே அவன் சொன்ன முறையிலேயே உங்களுக்குத் தருகிறேன்.

ஒரு சிறு கிராமம். பாழடைந்த பழைய மில். அதனுள் ஒயின் பாத்திரங்கள் முன் நீங்கள் உட்கார்ந்துகொண்டு இருக்கிறீர்கள். குழல் ஊதும் கிழவன் உங்களிடம் பேசுகிறான் கேளுங்கள் :

அருமை நண்பர்களே! எங்கள் நாட்டுப்புறம் இன்றைக்கு இருப்பதுபோல், புகழ் இன்றி, சாக்காட்டு அமைதியுடன் என்றுமே இருந்ததில்லை. அந்த நாட்களில் மில்லில் தொழில் செழிப்பாக நடந்துகொண்டிருந்தது. எங்கள் கிராமத்தைச்சுற்றி பத்துமைல் வட்டாரத்திலிருந்துகூட குடியானவர்கள் தங்கள் தானியங்களை அரைப்பதற்காக எங்களிடம் கொண்டு வருவார்கள். கிராமத்தைச் சுற்றிலும் சின்னஞ்சிறு குன்றுகளில் எல்லாம் காற்றாடியால் இயங்கும் மில்கள் நிறைய இருந்தன.

பைன் மரங்களின் நடுவே வீசும் வாடைக் காற்றுக்கு இசைய எங்கு பார்த்தாலும் மில்களின் காற்றாடிகள் சுழன்றுகொண்டிருந்தன. சாலையோரத்திலும், மலைச்சரிவுகளிலும் தானியப் பொதிகளைச் சுமந்துகொண்டு கழுதைகள் வரிசை வரிசையாகப் போய்க்கொண்டும், வந்துகொண்டும் இருந்தன. ஒவ்வொருநாளும் மில்லின் 'கரகர' ஓசையும், சவுக்குகளின் கார்' ஒலியும், 'போ, போ' என்று கூவும் மில் தொழிலாளியின் குரலும் கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் நாங்கள் கூட்டமாக மில்லுக்குச் செல்வோம். அங்கே, மில்லின் சொந்தக்காரர் எங்களுக்கு ஒயின் கொடுப்பார். மில் சொந்தக்காரர்களின் மனைவிகள் அரசியைப்போல அழகாயிருப்பார்கள். பூப்பின்னப்பட்ட மேலாடையுடன் தங்க நகைகள் அணிந்து அழகாயிருந்தார்கள். நான் என்னுடைய குழலை எடுத்துச் செல்வேன். இரவு நெடுநேரம்வரை நாங்கள் பாடிக்களித்துக் குதித்திருப்போம். அந்த மில்கள், எங்கள் நாட்டுப்புறத்தின் செல்வங்களாகவும், களிப்பூட்டுவனவாகும் இருந்தன.

துரதிர்ஷ்டவசமாக, பாரிஸிலிருந்து வந்த சில ஃபிரெஞ்சுக்காரர்கள் நெடும் பாதையினருகே நீராவி மில் ஒன்று கட்டினார்கள். 'புதிதாக இருப்பதெல்லாம் அழகானவை' என்பதற்கிணங்க மக்கள் தானியங்களை புது மில்லிற்கு அனுப்ப ஆரம்பித்தனர். பழைய காற்றாடிமில்கள் வேலையின்றி சோம்பியிருந்தன. தங்கள் வாழ்விற்காக கொஞ்சநாள் காற்றாடி மில்கள் போராடின. இறுதியில் நீராவி மில்களுடன் போட்டியிட சக்தியற்றவைகளாகி ஒன்றன்பின் ஒன்றாகக் காற்றாடி மில்கள் மூடப்பட்டன. வரிசையாக வரும் கழுதைகள் காணப்படவில்லை. பழைய மில் சொந்தக்காரர்களின் அழகான மனைவிகள் தங்களுடைய தங்க ஆபரணங்களை விற்றுவிட்டார்கள். ஒயின் கிடையாது. ஆட்டமும், பாட்டமும் ஒடுங்கி ஒன்றுமில்லாமல் போய்விட்டன. வாடைக் காற்று வீணாக வீசிக்கொண்டிருந்தது. காற்றாடிகள் அசைவற்று நின்றுவிட்டன. அதன் பிறகு, ஒருநாள் பழைய மில்களை இடித்துத் தள்ளி, அவைகளிருந்த இடத்தில் ஆலிவ், ஒயின் செடிகளை நட்டனர்.

இந்த சீர்கேட்டிற்கு நடுவிலும் ஒரு மில் தனித்து நின்று நீராவி மில்களுக்கு முன் தன் காற்றாடிகளைத் துணிவாகச் சுற்றிக்கொண்டிருந்தது. இப்பொழுது இரவு நேரத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறோமே, இதே மில்தான். இதன் சொந்தக்காரன் தான் கார்னீல்.

மாவரைப்பதையே தன் தொழிலாகக்கொண்டு ஏறத்தாழ அறுபது ஆண்டுகளைக் கழித்தான். நீராவி மில் வந்த பிறகு கார்னீல் வேலையின்றி பைத்தியக்காரன்போல் ஆனான். ஒரு வாரமாக கிராமத்தைச் சுற்றி ஓடுவதும், நீராவி மில்லால் மக்கள் அமைதியாக இருந்த நாட்டுப்புறத்தை அலங்கோலமாக்கிவிட்டனர் என்றும் உரத்த குரலில் கத்தினான். "அங்கே போகாதீர்கள், அங்கே இருக்கும் கொள்ளைக் காரர்கள் வயிறுவளர்ப்பதற்காக சாத்தானின் சாதனமான நீராவியை உபயோகப்படுத்துகிறார்கள். நானோ இயற்கையின் படைப்பான வாடைக்காற்றுடன் ஒத்துழைக்கிறேன்" என்றும் இவை போன்ற இன்னும் பல வார்த்தைகளால் காற்றாடி மில்லைப் புகழ்ந்தும் சொன்னான். ஒருவரும் கார்னீலின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கவில்லை.

இதனால் கோபங்கொண்ட கிழவன் தன் மில்லில் தனியாக, காட்டு மிருகத்தைப்போல் காலம் கழித்தான். பருவமடைந்த தன் பேத்தியைக்கூட அவன் அருகில் இருக்க அனுமதிக்கவில்லை. தாய், தகப்பனை இழந்த விவெத்துக்கு உலகில் அவள் பாட்டனைத் தவிர வேறு துணையில்லை. அறுவடைக்காலத்தில் ஆலிவ் இலையைச் சேகரித்தும், பண்ணையில் வேலைசெய்து பட்டுப் பூச்சிகளைச் சேர்த்தும் தன்னுடைய வாழ்வை நடத்த வேண்டியிருந்தது. எப்படியிருந்தபோதிலும், அவள் பாட்டனுக்கு அவள்மீது அன்பு அதிகம்! வெயில் கொளுத்தும் பகல் பொழுதில் தன் பேத்தி வேலைசெய்யும் பண்ணைக்குச் சென்று அவளைக் காண நான்கு அல்லது ஐந்து மைல்கள்கூட நடந்து செல்வான். ஓடியாடித் திரிய வேண்டியவள், அடங்கி ஒடுங்கி வேலை பார்ப்பதைப் பார்த்ததும் அவனை மீறிக்கொண்டு அழுகைவரும் மணிக்கணக்கில் அழுதுகொண்டே இருப்பான்.

பண்ணையில் கங்காணிகள் கடுஞ்சொல்லுக்கும், கொடுஞ் செயலுக்கும் இலக்காகும்படி விவெத் வேலை செய்ய வேண்டியிருந்ததைக் கண்டு, அவள் பாட்டன் அவளை அந்த மாதிரி துன்பத்திற்கு ஆளாக்கியிருக்கக் கூடாது என்று ஊர்மக்கள் கருதினர். நேற்றுவரை தன்மானத்துடன் வாழ்ந்த மனிதன், தன் பேத்தியையும் துயருக்கு ஆளாக்கிவிட்டு, தானும் கந்தல் உடையுடன், பிச்சைக்கோலத்தில் பைத்தியமாகத் தெருவில் திரிவதைக் காண மிகவும் பரிதாபமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்துக்கு வரும்பொழுது அவனைக் காண என்போன்றவர்களுக்கு மிகவும் வெட்கமாகவும், துக்கமாகவும் இருக்கும். முன்போல் எங்கள்முன் உட்காருவதில்லை. புண்ணிய தீர்த்தத்திற்கு அருகில் அமர்ந்திருக்கும் ஏழை எளியவர்களுடன் சேர்ந்து ஒரு மூலையில் இருப்பான்.

கார்னீலின் வாழ்வில், யாரும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாத ஏதோ ஒன்று இருந்தது. கிராமத்து மக்கள் தானியங்களை கார்னீலின் மில்லிற்கு கொண்டு செல்வதை நிறுத்தி அதிகநாட்கள் ஆகிவிட்டன. ஆனால் காற்றாடி மாத்திரம் எப்பொழுதும் சுழன்றுகொண்டேயிருந்தது. மாலை நேரங்களில், சுமையை ஏற்றிய கழுதையை ஓட்டிக்கொண்டு அவன் வருவதைக் காணலாம்.

"வணக்கம், கார்னீல். மில் எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருக்கிறதா?" என்று குடியானவர்கள் கேட்பார்கள்.

"எப்பொழுதும் வேலை செய்கிறது. நல்ல காலம்! வேலைக்கு ஒன்றும் பஞ்சமில்லை" என்று மகிழ்ச்சி பொங்க பதிலளிப்பான்.

எங்கே இருந்து உனக்கு இவ்வளவு வேலை கிடைக்கிறது என்று கேட்பவர்களுக்கு, உதட்டில் விரலை வைத்து திகிலுடன் "உஸ், நான் ஏற்றுமதிக்காக வேலை செய்கிறேன்" என்பான். இதற்குமேல் கார்னீலிடமிருந்து எந்தச்சேதியும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவன் மில்லில் சென்று பார்ப்பதற்கு யாருக்கும் துணிவு வரவில்லை. அவன் அருமைப் பேத்தி விவெத்கூட மில்லிற்குள் செல்ல முடியவில்லை.

மில்லின் கதவுகள் எப்பொழுதும் மூடியிருக்கும். பெரிய காற்றாடிகள் எப்பொழுதும் சுழன்றுகொண்டிருக்கும். நடை பாதையில் உள்ள புல் தரையில் கழுதை மேய்ந்துகொண்டிருக்கும். ஜன்னலருகே வெய்யிலில் காய்ந்துகொண்டிருக்கும் மெல்லிய, பெரிய பூனை கொடூரமாகப் பார்த்துக்கொண்டிருக்கும். கார்னீலைச்சுற்றி இருக்கும் இந்த இருட்டடிப்பு பற்றி மக்கள் வம்பளக்க ஆரம்பித்தனர். கிழவனின் போக்குக்கு ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றிய காரணங்களைக் கூறினார்கள். பொதுவாக, மில்லிற்குள் கிழவன் நிறையப் பணம் வைத்திருக்கிறான் என்று எல்லோரும் நம்பினார்கள்.

என் குழல் கானம் கேட்டு இன்புற இளைஞர்கள் என்னிடம் அடிக்கடி வருவார்கள். அவர்களுடன் ஆடிப்பாடிக் களித்திருக்கும்பொழுது ஒருநாள், என் மூத்தமகனுக்கும் விவெத்திற்கும் உள்ள நட்பு தெரிய வந்தது. அவர்கள் ஒருவரை யொருவர் காதலித்தனர்! எனக்கு

உள்ளூர மகிழ்ச்சிதான். கார்னீலும் கிராமத்தில் நல்ல மதிப்புடன் நன்றாக வாழ்ந்தவன். விவெத்தின் அழகு உருவம் என் வீட்டில் அங்கும் இங்கும் ஓடியாடித் திரிவதைக் காண எனக்கு மகிழ்ச்சிதான். உடனடியாக மணம் முடிக்கும் எண்ணத்துடன் கார்னீலைக் கண்டு இதுபற்றி இரண்டொரு வார்த்தை பேச நினைத்து மில்லிற்குச் சென்றேன்.

அந்தோ! அந்தக் கிழவன்! அவன் என்னை எப்படி வரவேற்றான் தெரியுமா? கண்டிப்பாக கதவைத் திறக்கவே முடியாதென்றான். சாவித் துவாரத்தின் வழியாக, நான் வந்திருக்கும் காரணத்தைப்பற்றி என்னால் முடிந்த அளவு விளக்கிக் கூறினேன். நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அந்த திருட்டுப் பூனை கூட என் தலைக்குமேல் நின்று கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அந்தக் கிழவன் என் பேச்சை முடிக்கவிடாமல், என்னைப்பற்றி இழிவாகத் திட்டினான். "போ, போ, போய் உன் குழலை எடுத்து ஊது. உன் மகனுக்கு மணம் செய்ய விரும்பினால் எங்காவது பணக்காரன் வீட்டில் போய் பெண் பார்" என்று கத்தினான். எனக்கு எப்படியிருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! அந்த இழிமொழிகளைக் கேட்டு என் இரத்தம் கொதித்தது. கோபத்தை அடக்கிக்கொண்டு, அந்தச் சோகக் கதையைச் சொல்ல மில்லிலிருந்து திரும்பினேன்.

அந்தச் சின்னஞ்சிறு சிட்டுகள் என் பேச்சை நம்பவில்லை. அவர்கள் இருவரும் சேர்ந்து சென்று கிழவனைச் சந்தித்துப் பேச விரும்பி என் அனுமதி கேட்டனர். மறுப்பதற்கு எனக்குத் துணிவு வருமா? அதோ அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

காதலர்கள் மில்லுக்குச் செல்லும்பொழுது கார்னீல் அங்கு இல்லை. கதவைப் பூட்டிக் கொண்டு சென்ற கிழவன் சுவற்றில் சாற்றியிருந்த ஏணியை மறந்துவிட்டுச் சென்றுவிட்டான். மில்லிற்குள் என்ன இருக்கிறது என்று அறிய விரும்பியவர்களாய் ஏணியில் ஏறினார்கள். வியப்பூட்டும் பொருள்கள்! அறை காலியாக இருந்தது. ஒரு சிறு தானிய மணி கூடக் கிடையாது. சுவற்றில் மாத்தூசி கூடக் கிடையாது. சிலந்தி வலையில் கூட தும்பு தூசி ஒன்றும் இன்றி இருந்தது. இயந்திரத்தைச் சுற்றும் கைப்பிடியில் ஒல்லியான, பெரிய பூனை தூங்கிக்கொண்டிருந்தது.

கீழே இருக்கும் அறையிலும் அதே பரிதாபகரமான காட்சி! கவனிப்பார் அற்றுக் கிடந்தது. இருளடைந்து இருந்தது. கந்தல் துணிகள் சில. படிக்கட்டில் ஒரு சிறு ரொட்டித் துண்டு. ஒரு மூலையில் நாலைந்து மூட்டைகள் கிழிக்கப்பட்டுக் கிடந்தன. அவற்றினின்றும் கல்லும் மண்ணும் கலந்த கலவை சரிந்து விழுந்து கிடந்தது.

அதுதான் கார்னீலின் இரகசியம்! மில் வேலை செய்கிறது, மாவு அரைக்கப்படுகிறது என்று நாம் நம்புவதற்காக, தன் தன்மானம் காப்பாற்றப்பட, அந்தக் கல்லையும், மண்ணையும் காட்சிப் பொருள்களாகக் காண்பித்து, கழுதைமீது ஏற்றி மாலை வேளைகளில் நடைபாதையில் சென்று கொண்டிருந்திருக்கிறான். அந்தோ பரிதாபம்! பாவம், கார்னீல்! நீராவி மில் வந்ததிலிருந்து கார்னீலின் காற்றாடி மில்லைத் தேடி யாரும் வருவதில்லை. காற்றாடி சுழன்று கொண்டிருந்தது, ஆனால் மாவு அரைக்கப்படாமல் சும்மா சுற்றிச் சுற்றி வந்தது.

தாங்கள் கண்ட காட்சியைச் சொல்ல, காதலர்கள் கண்ணீர் மல்கும் கண்களுடன் என்னிடம் வந்தார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் என் மனம் துக்கத்தால் வெடித்துவிடும்போல் இருந்தது. அண்டை அயலாரிடம் ஓடி விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். வீடுகளில் இருந்த தானியங்களை உடனடியாக எடுத்துக்கொண்டு கார்னீலின் மில்லிற்குச் செல்லுவதென்று முடிவுசெய்துகொண்டோம். சொல், செயலாக அதிக நேரம் பிடிக்கவில்லை! வரிசை வரிசையாக கோதுமை முதலிய தானியங்களை கழுதைமேல் ஏற்றிக்கொண்டு மில்லிற்குச் சென்றோம். கோதுமை, ஆம், உண்மையான கோதுமை!

மில்லின் கதவுகள் திறந்து கிடந்தன. காரையும் சாந்தும் கலந்த சாக்கின்மேல் உட்கார்ந்து இருகைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு கார்னீல் அழுது கொண்டிருந்தான். தன் இரகசியம் பிறருக்குத் தெரிந்துவிட்டதை நினைத்து வருத்தப்பட்டு அழுதான். "அந்தோ! பரிதாபம்! என் மில் அவமானப் படுத்தப்பட்டு விட்டது...நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை." என்று கூறி அழுதான். அழுது அழுது அவன் நெஞ்சு கனத்துவிடும்போலிருந்தது. யாரையோ திட்டுவதுபோல் கடுஞ் சொற்களை வீசி மில்லைத் திட்டினான்.

இந்த நேரத்தில் மில்லிற்கு முன் சுமைகளை ஏற்றிக்கொண்டு கழுதைகள் வந்து சேர்ந்தன. கடந்து சென்ற அந்த இன்ப நாட்களைப்போல நாங்கள், "ஓ! கார்னீல், கார்னீல்!" என்று

உரத்த குரலில் கத்தினோம். மில் கதவுக்கு முன்னால், கொண்டுவந்த தானிய மூட்டைகளைக் கொட்டினோம். அவற்றிலிருந்து தானிய மணிகள் நாலாபுறமும் சிதறியோடின.

கார்னீல் தன் பெரிய விழிகள் அகல நோக்கினான். கொட்டிக்கிடக்கும் கோதுமையை நடுங்கும் தன் இரு கைகளில் அள்ளி, அழுகையும் சிரிப்பும் சேர, "இது கோதுமையல்லவா! மணியான கோதுமை! நல்லகாலம்!...ஆசை தீர என் கண்களால் அவற்றைப் பார்க்கிறேன்" என்றான். பிறகு எங்களைப்பார்த்து, "என் மில்லிற்குத் திரும்பி வருவீர்கள் என்று எனக்கு முன்பே தெரியும். அந்த நீராவி மில் வைத்திருப்பவர்கள் திருடர்கள்" என்றான். எங்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் கார்னீலை ஊர்வலமாகப் பெருமிதத்துடன் தூக்கிச்செல்ல விரும்பினோம். "கூடாது இரை இன்றி இருக்கும் என மில்லுக்கு இரை போடவேண்டும்...சிறிது சிந்தித்துப் பாருங்கள்! நீண்ட நாட்கள் வேலை இன்றி இருக்கிறது" என்றான்.

மூட்டைகளை அவிழ்த்து தானியங்களை மில் இயந்திரத்தில் கொட்டி, அங்கும் இங்கும் சுற்றி, மாவாக அரைக்கப்படுவதைக் கவனித்துக்கொண்டிருந்தான். புதிதாக அரைக்கப்பட்ட மாவிலிருந்து, தூசி முகட்டை நோக்கி உயரப்பறந்து கொண்டிருந்தது. இந்தக் காட்சியைக் கண்ட எங்கள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது.

அன்றிலிருந்து கார்னீலுக்கு வேலை இல்லாமல் இருந்ததில்லை. ஒருநாள் காலை! கார்னீல் இறந்தான். கடைசியாக இருந்த ஒரே காற்றாடி மில்லும் என்றென்றும் சுற்றாமல் அப்படியே நின்றுவிட்டது. இறந்த கார்னீலின் இடத்திற்கு ஈடுசெய்ய யாராலும் முடியவில்லை.

உங்களுக்கு என்ன தோன்றுகின்றது! இந்த உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் முடிவு இல்லாமல் இல்லை. இயற்கைக்காற்று வீச அதற்கு இசைந்து ஆடி இன்பமளித்த அந்தக் காற்றாடி மில்கள் மறைந்துபோய் விட்டன. கடலில் பிரயாணம் செய்யும் கப்பல் பிரயாணிபோல், நாம் அடிக்கடி உடுத்தும் புத்தம் புதிய உடைகள்போல், பாராளுமன்றத்தில் ஊராள வந்து வந்து போகும் எத்தனையோ மக்களைப்போல, காற்றாடி மில்கள் மறைந்தே போய்விட்டன.

[அல்பான்ஸே தோதே என்ற பிரெஞ்சுப் பெரும் நாவலாசிரியர் எழுதிய (Le secret de maitre cornille) என்ற பிரெஞ்சுச் சிறுகதையொன்றின் மூலத்திலிருந்து மொழி பெயர்ப்பாகும்]

'கிருமிகளின் காலம்'

உலகிலுள்ள மற்ற உயிரினங்களின் எண்ணிக்கை அளவோடு, மனித இனத்தின் எண்ணிக்கை அளவை ஒப்பிட்டுப் பார்த்தால், மனித இனத்தின் அளவு, கணக்குக்கே எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய இன்றியமையாமை யில்லாமல் புறக்கணித்து ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய ஒன்றாகக் காட்சியளிப்பதைக் காணலாம்.

இந்தக் காலத்தை உள்ளபடியே '**மனிதனின் காலம்**' என்றோ, அல்லது '**குட்டி போட்டுப் பால் கொடுக்கும் உயிரினங்களின் காலம்**' என்றோ கூற முடியாது. இதனைக் '**கிருமிகளின் காலம்**' என்றுதான் உண்மையில் சொல்ல வேண்டும்.

அறிவியல் அறிஞர்கள் இதுவரையில் 7,00,000 வகையான கிருமிகள் இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர். கண்டு பிடிக்கப்படாத கிருமிகளின் வகைகள் இதைப் போல் நான்கு மடங்கு மிகவாக இருக்கும் என்று ஊகிக்கிறார்கள். ஒவ்வொரு வகையிலும் கணக்கிட்டுச் சொல்ல முடியாத அளவுள்ள கிருமிகள் இருக்கின்றன. சில சமயங்களில் ஒரு காட்டிலோ அல்லது மலையிலோ வந்து சேரும் சிறு குருவிகளின் எண்ணிக்கையே, ஒரு கண்டத்திலுள்ள மக்களின் எண்ணிக்கையை மிஞ்சுவதாக இருக்கும். நாமெல்லாம் உலகிலிருந்து அழிந்துவிட்டால் கூட அப்படி ஒரு இழப்பு ஏற்பட்டு விட்டதாக உலகம் கருதாது; அந்த அளவுக்கு உலகில் சுறுசுறுப்பு வாழ்க்கையை நடத்திக் காட்ட கோடானு கோடி உயிர்கள் இருந்து வருகின்றன.

—ஆலன் டீவோ (Alan Devoe)

(39)

பிரமா தன் மகளான சரசுவதியை மனைவியாக ஆக்கிக்கொண்டது சரியா?

இந்தக் கேள்வி நமக்கு மட்டுமல்ல, புராண காலத்திலேயே எழுந்திருக்கிறது. மற்றவர்கள் கேட்காவிட்டாலுங்கூட, புராணம் எழுதியவர்கள் புராணத்தைப் படிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள புனித வகுப்பினர் அவர்களுக்கு அந்தச் சந்தேகங்கள் உண்டாகியிருக்கின்றன. மாதேவன் என்றாலும், மகளை மருவ நினைத்தது—மருவியது மாபாதகம் தானே என்ற கேள்வி எழுந்தது. புராணம், வேதவாக்கு, தெய்வ ஏடு என்பதற்காகப் பலர் வெளிப்படையாகக் கேட்காவிட்டாலும், பிரமாவின் மோக வெறியின் விளைவு—மகளை மனைவியாக்கிக் கொண்ட மகானுபவரின் கதை அவர்களால் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாயில்லை.

ஊரில், உலகில் பிரமாவைப்போன்ற பிதா எவனாவது இருந்திருந்தால், காரியுமிழ்வார்கள் கழுத்தை வெட்டி, கனலில் போட்டு, நீராக்கி, சாம்பலாக்கி விடுவார்கள். பிரமா சரசுவதிக்கு மட்டுமல்ல, உலகங்களுக்கேப் பிதாவாக இருப்பவர். அவர் கொடும் செயலில் ஈடுபட்டார் என்றால், மகளை மஞ்சத்திற்கு இழுத்தார் என்றால் கோபமும் கேள்வியும், காமுகனைப்பற்றி வெறுப்பும் அதிகமாக இருந்திருக்கும். காமம் என்றால், கண்ணை மறைத்தது கணப்பொழுதில், பின் முற்றும் தெரிந்தவரானதால் தவறைத் திருத்தி தந்தை நிலை மாறாமல் பாதுகாத்தார் என்றுவது கதை வருகிறதா? அதுவும் கிடையாது. கணத்தில் தோன்றி மறைவதாக அல்ல, நிரந்தர ஏற்பாடாக—என்றென்றும் மனைவியாக இருக்கவேண்டிய நிலையை தம் மகளுக்கு அவர் அளித்தார் சிவன் "வரந்தந்ததும்," மகளை அழைத்துக்கொண்டு பிரமா தாமரைப் பூவினுள் மறைந்தாராம், நூறு ஆண்டுகள் இன்பம் நுகர்வதில் கழித்தாராம்! புராணங்கள் வெட்கமின்றி சொல்கின்றன. இருந்தாலும், மகளைத் தந்தை மஞ்சத்துக்கு அழைத்த நிலை புராணங்களுக்கே அருவருப்பாய் இருந்திருக்கிறது. முதலில் புராணம் எழுதியவர், அவருக்கிருந்த உற்சாகத்தில் தந்தைக்கும் மகளுக்கும் கல்யாணம் செய்து பார்த்துவிட்டுப் போய்விட்டார். பின்னால் வந்தவர்களினால் கதையை மாற்றியமைக்க முடியவில்லை, அதே சமயம் சந்தேகங்களுக்குச் சரியான பதிலும் தர முடியவில்லை. கொஞ்சு மொழி குமரியைக் காமக்கொட்டிலுக்கு அழைத்துச் சென்றான் அவள் தந்தை என்றால், யாரால்தான் சமாதானம் தரமுடியும்? சமாதானம்—சரியான சமாதானம் தரமுடியவில்லை யென்றதும், ஏதாவது ஒரு சமாதானம் தரவேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு சில புராணகாரர்கள் முயன்று பார்த்துள்ளனர்.

மச்ச புராணத்தில் அத்தகைய சமாதானம் தரப்படுகிறது, பிரமா தம் மகளை மனைவியாக ஆக்கிக்கொண்டது எவ்வளவு பொருத்தமானது என்பதற்கு மச்சாவதாரமெடுத்த திருமாலால் வைவச்சுதமனுக்குச் சொல்லப்பட்டது மச்ச புராணமாகும்! வைவச்சுதமன் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க, அதற்குப் பதில் சொல்ல, புராணம் வளர்ந்தது. மேலே குறிப்பிட்டுள்ள பகுதி மச்சபுராணம் நான்காவது அத்தியாயத்தில் வருவதாகும்,

வைச்சுதமனு கேட்கிறார். "ஓ, கருணா மூர்த்தி! பிரமா தமது மகளை மணந்து கொண்டாரென்பதைக் கேட்டதும், நான் மிகவும் பதைபதைத்து விட்டேன். அவர் செய்தது பயங்கரமான மாபாதகம் என்று ஏன் கருதப்படவில்லை? பிரபஞ்சத்தின் முதல்வரே எனது சந்தேகத்தைப் போக்குங்கள், தந்தை—மகள் என்ற உறவு முறை பாராது, பிரமாவும் அவர் மகளும் மணந்துகொள்ள எப்படி அனுமதிக்கப்பட்டார்கள் என்பதை விளக்குங்கள்!"

அரசனின் கேள்விக்கு விட்டுணு கீழ்க் கண்ட பதிலைத் தந்தார்.

"ஓ, அரசனே! அத்தகைய சந்தேகங்கள் மனிதர்களுக்கு மட்டும் உண்டாகும். மனிதர்களுக்குத்தான் தூல சரீரம், பிள்ளைகளைப் பெறுவதும் வேறு விதத்தில்! ஆனால் முதல் சிருட்டி தெய்வீகமானது, ராசகுனம் மிக்கது. மனித உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட உடலைத் தேவர்கள் பெற்றிருக்கிறார்கள், அவர்களுக்குக் குழந்தைகள் அற்புதமான விதத்தில்! அந்த மகா ரகசியத்தை மனிதர்கள் உணர மாட்டார்கள்! தெய்வீக அறிவு ஒன்றுக்கு மட்டும்தான் தெய்வீக பிறப்பின் இரகசியம் தெரியும். பாம்பின் கால் பாம்புக்குத் தெரிவதைப்போல, பறவை சென்ற வழி பறவைக்குத் தெரிவதைப்போல, தெய்வீக ஞானமுடையவர்களுக்குத்தான் தெய்வீக இரகசியம் தெரியும்! ஆதலால், அரசனே! ஒழுங்குமுறை பற்றிய பிரச்சினைகளை, தேவர்கள் செய்யும் காரியத்தில் பார்க்கக் கூடாது. அவர்கள் எதைச் செய்தாலும், நோக்கத்தை மட்டும் தான் வைத்துப் பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு வினையின் பயன் (கர்மா) உண்டு, தேவர்களுக்குக் கிடையாது. ஆதலால் தேவர்களின் செய்கைகளைப்பற்றிச் சந்தேகங்கள் எழுப்பக் கூடாது, தேவர்கள் செய்ததைப் போல மனிதர்கள் செய்ய முயலவும் கூடாது"

விட்டுணு தரும் விளக்கம் எப்படியிருக்கிறது? தேவர்கள் மனிதர்களுக்கு அப்பாற்பட்டவர்கள். தேவர்கள்செய்யும் காரியங்களில் ஒழுங்கு முறைகளைப் பார்க்கக் கூடாது. நோக்கம்தான் முக்கியம்.

மகள் மனைவியாக்கப்பட்ட விபரீதத்தைச் சொன்னால், வேடிக்கையான விளக்கம் தருகிறார் அந்த வைகுந்த வாசர்! மனிதர்கள் பார்க்கும் ஒழுங்குமுறை தெய்வலோகத்தில் கிடையாது என்கிறார்.

செயல் என்ன என்று பார்க்கக் கூடாது. அதன் நோக்கம், பலன்—அதைமட்டும் பார் என்று பரந்தாமன் கூறுகிறார். பிரமாவின் நோக்கம் என்ன? சிருட்டி ஆரம்பிக்க வேண்டுமென்பது. மனிதர்களை உண்டாக்குவதற்கு, முதன்முதல் ஒரு மனிதனை உண்டாக்க வேண்டுமென்பது. அதாவது முதன்மனிதனை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது. அதற்கு மனைவி கிடையாது. மகள் ஒருத்தி இருந்தாள். பிள்ளை பெற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், மகள் என்றும் மாற்றாள் என்றும் பாராமல் அவளை அணைந்தார். பலன்? குழந்தைகள் பிறந்தன. மகளுடன் கொஞ்சி, ஒரு மகவையும் பெற்றெடுத்தது சரியானதே என்று பாற்கடல் அதிபர். வாதிடுகிறார். மகளின்மீது காமவெறி தீர்த்துக்கொண்டார் பிரமா, அது சரியானது என்று வாதிடுபவர் வேறு யாருமில்லை அவருடைய தந்தைதான்!

மண்ணுலகில் எவரேனும் பாவங்கள் செய்தால்—பிரமா செய்ததை போல மிகப் பெரும் பாவங்கள் அல்ல. பாவம் என்று மிகச் சிறியதாக இருந்தாலும் போதும், அதற்கு ரௌரவாதிநரகங்களைக் காட்டி, வேதபுராணங்கள் பயமுறுத்துகின்றன. கொதிக்கும் எண்ணெய் காய்ச்சிய இரும்புத் தூண் இவ்வாறு பயங்கரத் தண்டனைகளை அவைகள் விதிக்கின்றன. மிகப பெரும் பாவச் செயலை பிரமதேவன் செய்திருக்கிறார் ஆனால் மச்சாவதாரமூர்த்தி அவருக்கு மன்னிப்புத் தருகிறார். "கர்மாவின் பயன் தேவர்களுக்குக் கிடையாது!" என்று சொல்லி.

மகாவிட்டுணு மற்றொன்றும் கூறுகிறார் "தேவர்களின் செய்கைபற்றிச் சந்தேகங்கள் எழுப்பக் கூடாது." அதற்குமேல் தேவலீலைகளைப்பற்றி, பிரமாவின் திவ்விய திருவிளையாடலைப்பற்றி யார் பெச முடியும்?

அண்டசராச்சரங்களையெல்லாம் ஆட்டிவைப்பவர்கள் மும்மூர்த்திகள். அவர்களில் ஒருவரான பிரமா மகளைத் துரத்திக்கொண்டு ஓடினார். தந்தையின் விபரீத நோக்கங்கண்ட மகள் மானத்துக்கு மன்றாடினாள், கதறியழுதாள், கூக்குரலிட்டாள்.

கூக்குரல்கேட்டு, மும்மூர்த்திகளுள்மற்றொருவரான சிவபெருமான் வருகிறார், தனது கூட்டாளி செய்யவிருந்த பாதகச் செயல் பார்த்து முதலில் பதைபதைத்து விடுகிறார், அந்த முதல் ஆத்திரத்தில் குற்றவாளியைத் தண்டிக்கிறார். பின் குற்றவாளியை மன்னித்து, மகளை மனைவியாக—சட்டப்படி தந்துவிட்டுப் போகிறார்.

மும்மூர்த்திகளில்மிஞ்சியவரான மகாவிட்ணு பிர்மா செய்ததற்கு விளக்கந் தருகிறார், தேவ லீலைகளைக் கண்காணிப்பது, கண்டிப்பது தவறு என்று வாதாடுகிறார்.

அண்ட சராசரங்களை ஒழுங்குடன் பார்த்துக் கொள்ள வேண்டிய மும்மூர்த்திகளின் போக்கே இவ்விதமிருந்திருக்கிறது.

ஒரு ஊரில் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றுவதற்கு மூன்று நீதிபதிகள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஒரு நீதிபதி பஞ்சமா பாதகங்களும் பஞ்சாகிப் போகும்படி, எங்குமே நினைத்திராத பயங்கரக் குற்றங்களை செய்துகொண்டிருக்கிறார், கொடுமைக்கு ஆளானோர் "கோ"வெனக் கதறிடும் பொழுது, மற்றொரு நீதிப்தி வந்து, முதல் நீதிபதி செய்த குற்றங்களைச் சட்டப்படி சரியானதாக ஆக்கிவிட்டுப் போகிறார்.

"என் வீட்டில், இந்த நீதிபதி புகுந்து கலாட்டா செய்கிறார்"

"உன் வீடா?"

"ஆமாம்! என் வீடுதாங்க, சற்று நேரத்துக்குமுன், கண்ணாடி உடையாமல், கதவுகள் சரியாக, சாமான்கள் ஒழுங்காக இருந்தன! இந்த நீதிபதி, குடி வெறியில் உள் நுழைந்தார், என்னை அடித்தார். என் மனைவியை மானபங்கப்படுத்த முயன்றார், மக்களை உருட்டி விட்டார். கண்ணாடிக் கதவை உடைத்தார்!"

"அப்படியா! உன் வீடு என்று எங்கே எழுதி வைத்திருக்கிறது?" இரண்டாவது நீதிபதி கடுமையாகக் கேட்டார்.

வீட்டுக்காரன் அதிர்ந்துவிட்டான்.

"என் வீடு என்பதற்கா? அக்கம்பக்கத்தில் உள்ளவர்களைக் கேளுங்கள். ஊரில் கேட்டுப் பாருங்கள். அதெல்லாம் எதற்கு? இதோ! சட்டப்படி தரப்பட்ட வீட்டுப் பத்திரம், சொத்து விவரம்,"

"இங்கே கொடு! இதுதான் உன் பெயரா?"

"ஆமாம்!"

இரண்டாவது நீதிபதி சற்று முறைத்துப் பார்த்தார், எழுதுகோலை எடுத்தார், பத்திரத்தில் இருந்த சொந்தக்காரன் பெயரை அடித்தார், முதல் நீதிபதி பெயரை எழுதினார்.

"இப்பொழுது சரியாகி விட்டது. இனி இந்த வீட்டின் சொந்தக்காரர் இவர்தான்!" இரண்டு நீதிபதிகளும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

வீட்டின் சொந்தக்காரன் திகைத்துப் போனான் ஊரில் குற்றங்குறையென்றால் நீதிபதிகளிடம் முறையிடலாம். நீதிபதிகளே குற்றஞ் செய்ய ஆரம்பித்தால் யாரிடம் போய் முறையிடுவது?

"ஏன் நிற்கிறாய்? இனி இந்த வீடு முதல் நீதிபதிக்குச் சொந்தம். சட்டப்படி நான் தந்து விட்டேன், வீட்டைவிட்டு நீ வெளியேறி விடு, குழந்தைகளை குட்டிகளை அழைத்துக் கொண்டு போ! உன் மனைவியை மட்டும் விட்டுவிடு, இவர் கருணையுள்ளவர் பத்திரமாகப் பார்த்துக் கொள்வார்!"

வீட்டு சொந்தக்காரனுக்கு வீடு போவது மட்டுமல்ல, கொஞ்சம் போனால் மனைவிகூட மாற்றப்பட்டாலும் மாறலாம் என்ற பயம் வந்துவிட்டது. இரண்டு நீதிபதிகளும் செய்த அக்கிரமங்களை எடுத்துச் சொல்ல. மூன்றாவது நீதிபதியிடம் அவன் போனான். மூன்றாவது நீதிபதி மிகப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். பின் அவர் சொன்னார். "இத்தகைய சந்தேகங்கள் உங்களுக்குத்தான் உண்டாகும். நீதிபதிகளுக்கு உண்டாகாது! நீங்கள் பார்க்கும் ஒழுங்கு முறைகளை, சட்ட திட்டங்களை நீதிபதிகளிடம் எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். சட்டதிட்டங்களை மீறினால் உங்களுக்குக் கிடைக்கும் தண்டனைகள் அவர்களுக்குக் கிடையாது. இனிமேல் நீதிபதிகளைக் கண்டித்தோ, அவதூறாகவோ பேசக்கூடாது, என்முன் நிற்காதே, அற்பனே! ஓடிப்போ!" குறை சொல்லி, முறை கேட்க வந்தவனை மூன்றாவது நீதிபதி விரட்டி யடித்தார்.

இந்த மூன்று நீதிபதிகளையும் போலத்தான் மும்மூர்த்திகளின் கதையும் இருக்கிறது. பிரமா ஒரு மாபெருங் குற்றம் செய்கிறார். சிவன் அதை நிரந்தரமான ஏற்பாடாக ஆக்கிவிடுகிறார். பிரமா செய்ததற்குச் சமாதானமாக மகாவிட்டுனு பேசுகிறார். செய்த குற்றமோ தேவரானாலும் தேவலோகமானாலும் மன்னிக்க முடியாதது—தந்தை மகளைத் தாரமாக்கும் முறை.

வைவச்சுதமனுவின் கேள்வியும், மச்சாவதாரமூர்த்தியின் பதிலும் மச்சபுராணம் 4-வது அத்தியாயம், முதல் சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. பிரமா செய்ததை அவரப்பன் விட்டுணு ஆமோதித்துப் பேசிய போதிலும், சமாதானம் சொல்லி முடியும் பொழுது, "அதே மாதிரி செய்கைகளைச் செய்ய மனிதர் முன்வரக் கூடாது!" என்று எச்சரித்து விடுகிறார்.

புராணக்காரர்களுக்கே பயம் எங்கு பிரம பக்தர்கள் பூமியிலும் பிரமாவைப் பின்பற்ற ஆரம்பித்து விடுகிறார்களோ என்று! அதனால் தான் தாமரைப் பூவில் வாழ் கடவுள் செய்த

தவறுக்குச் சமாதானம் கூறும்பொழுது தரணி வாழ்வோருக்கு அது தகாது என்றும் தொடர்ந்து சொல்ல வேண்டியிருந்தது.

"இருந்தபோதிலும்" மச்சபுராணம் மேலும் தொடர்கிறது 4 சுலோகங்கள் தள்ளி; "தனது மானச புத்திரர்கள் முன்னில் காமவெறியுடன் நடந்துகொண்டமைக்காக பிரமதேவர் மிகவும் அவமான மடைந்தார். ஆதலால் காமன்மீது கோபம் உண்டாகி, அவனுக்குச் சாபங் கொடுக்க முற்பட்டார்."

புராணகாரர் பிரமாவின் கதையை மிகச் சங்கடமான நிலையில் வைத்துக்கொண்டார். தந்தையை மகள்மீது காதல் கொள்ளச் செய்து, மணவினையை முடித்து, மகள்-மனைவி மடிமீது குழந்தையையும் தரச் செய்துவிட்டார். பின் சமாதானம் தந்தார், பிரமா செய்ததில் தவறொன்றுமில்லை, தேவர்கள் செய்ததில் தவறொன்றும் இருக்காது என்றெல்லாம் அவர் சொல்லியது மற்றவர்களுக்குச் சமாதானம் தந்தோ இல்லையோ, புராணகாரருக்கேச் சமாதானம் அளிக்கவில்லை. கதையைத் தொடரும்பொழுது, பிரமாவை வெட்கமும் துக்கமும் அடைந்த நிலைக்குத் தள்ளி விடுகிறார். தவறொன்றும் நிகழவில்லையென்றால் அவமானமென்று வருந்துவானேன்? காரணங் கண்டுபிடித்து காமனைச் சபிப்பானேன்?

இந்த இடத்தில் மட்டுமல்ல, சரசுவதியின் மீது மோகங் கொண்டு பிரமா (ஐந்து தலைகளுடன்) தன்னிடத்தைவிட்டு எழுந்து, மகளென்றும் பாராது அவளை அணையும் நோக்கத்துடன் பின்னேடி வந்தபொழுது, புராணகாரர் கூறுகிறார். "தவத்தின் பலனாக அதுவரை அடைந்திருந்த பலன் முழுவதையும் பிரமா இழந்து விட்டார்..." ஓரிடத்தில் தவறு நிகழ்ந்ததை விளக்கிய புராணகாரர், அடுத்தாற்போல் அதற்கு சத்தற்ற சமாதானந் தர முயலுகிறார்.

எவ்வாறேனும் ஆக, பிரமா சரசுவதியுடன் தாமரைப்பூவில் ஒளிந்து நூறு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல், மதுவுண்ணும் வண்டு போல் இன்பத்தைச் சுவைத்தபடி இருந்தார். அதன் பலனாக சுயம்பு மனு என்ற ஆதி மனிதன் உண்டானன்.

பிரமா தன் மகளை அனுபவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சென்றபொழுது, சிவன் அவர் முன் தோன்றி ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளியெறிந்து விட்டதாக ஒரு புராணத்திலும், எல்லா சிருட்டியையும் செய்து முடித்து விட்டோமென்ற செருக்குடன் சிவமூர்த்தியை பிரமா எதிர்த்ததாகவும், அதனல் கோபங்கொண்ட சிவன் பிரமாவின் ஐந்தாவது தலையைக் கிள்ளி மண்டையோட்டைக் கையில் வைத்துக் கொண்டதாக மற்றொரு புராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. இரண்டு கதைகளின்படியும், மகளின் அழகைக் காணும் ஆசையுடன் பிரமா மேற்கொண்ட ஐந்து தலைகளில் ஒன்று கிள்ளி எறியப்பட்டு, நான்கு தலைகள் மிஞ்சின. பிரமாவுக்கு நான்கு முகங்கள் வந்த கதை இது, ஆனல் நல்ல கதையல்ல.

மோகவெறி தீர்ந்ததும், பிரமாவுக்கு மற்றவர்கள்மீதுதான் கோபம் வந்தது. முதலில் காமனுக்கு சாபம் கொடுத்தார். "உன்னுடைய மாயவலையால் என்மீது காமவெறி யுண்டாக்கியதால், சிவபெருமான் உன்னை எரித்து விடுவார்" என்று,

அடுத்தபடியாக, மரிசி என்ற பிரமபுத்திரருக்கு ஆறு பையன்கள் இருந்தார்கள். அதாவது பிரமாவின் பேரப் பிள்ளைகள். தமது மகளையே பிரமா மனைவியாக ஏற்படுத்திக் கொண்டதைப் பார்த்ததும்—அதாவது அத்தையாக இருந்தவள் பாட்டி நிலைக்குத் திடீரென்று உயர்ந்ததும்—அவர்களுக்குச் சிரிப்பு உண்டானதும், பிரமாவும் சரசுவதியும். கணவனும் மனைவியுமாக வெளிவந்தபொழுது மற்ற பெரியவர்கள் தலையைத் தாழ்த்தி பேசாமலிருந்தாலும் அந்தப் பேரப் பிள்ளைகள் கைகொட்டி சிரித்துவிட்டாராம். பிரமாவுக்குக் கோபம் வந்தது, பேரப் பிள்ளைகளை அரக்கர்களாகும்படி சபித்துவிட்டார்! அந்தப் பாலர்களும் மூன்று தடவை அரக்கர்களாகப் பிறந்து கடைசியாகத் தெய்வலோகம் மீண்டும் வந்து சேர்ந்தார்கள்.

பிரமா—சரசுவதிக் கதையைப் போலவே, பிரமா—திலோத்தமை கதைகளும் இருக்கின்றன. திலோத்தமையைப் படைத்ததும் பிரமா அவள் அழகைக் கண்டு வியந்து அவளைப் பார்த்தபடி இருந்தாராம். நாணமுற்ற பெண் சுற்றி வந்தாளாம். நாற்றிசையும் ஒரே சமயத்தில் பார்க்க நினைத்த பிரமா, நான்கு முகங்களை உண்டாக்கிக் கொண்டாராம்.

மற்றொரு கதையில் பிரமா கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்ததாயும் அதை அழிக்க நினைத்த இந்திரன், திலோத்தமையை அனுப்பினனும். திலோத்தமையின் அழகைக் கண்டு மயங்கிய மாதேவர், தவத்தைக் கைவிட்டு தையலைத் தொடர்ந்து வந்தாராம், திலோத்தமை மானுருக்கொண்டு ஓட, பிரமாவும் மானுருக்கொண்டு பின் தொடர்ந்து, அவளைத் தன் மனைவியாக—சில்காலம்—அடைந்தாராம்.

வினாவும் விளக்கமும்

வினா: பீநாறிச்சங்கை நுகர்ந்து பார்த்து விட்டு அதன் துர்நாற்றத்தைக் கொண்டு மலர்கள் இனமே துர்நாற்றமுடையன என்று முடிவு கட்டுவதும், சொல்வதும் நன்மை தருமா? அதை விடுத்து சமயங்களில் ஊடுருவி நிற்கும் பேருண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள். அது தங்களுக்கும் நாட்டுக்கும் நன்மை தரும் என்பதை ஏற்றுக் கொள்ளுவீர்களா?

[இது அருள் நெறித் திருக்கூட்டத்தின் 11-வது வினா.]

விளக்கம்: பீநாறிச்சங்கை முகர்ந்து பார்த்து விட்டு, அதன் தீநாற்றத்தைக் கொண்டு, மலர்கள் எல்லாமே தீநாற்றமுடையன என்று முடிவு கட்டுவதும், சொல்லுவதும் நன்மை தரா என்பது மட்டுமல்ல, அப்படி முடிவு கட்டுவதும், சொல்லுவதும், பைத்தியக்காரத்தனமாகும் என்று எள்ளி நகையாடப்பட வேண்டியனவும் ஆகும் என்று தான் பகுத்தறிவு வாதிகள் கூறுகின்றனர்.

பீநாறிச்சங்கை வைத்துக் கொண்டு அந்தப்படிக்கே எல்லா மலர்களைப் பற்றியும் மதிப்பிடும் பைத்தியக்காரன் போன்று, பகுத்தறிவு வாதிகளாகிய நாம், சமயங்களிலுள்ள ஒரு சில குறைபாடுகளை வைத்துக் கொண்டு, சமயக் கருத்துக்கள் அனைத்தையுமே குறைபாடுடையனவாகக் காண்கிறோம் என்னும் கருத்துப்பட அருள் நெறித் திருக்கூட்டத்தார் வினா எழுப்பியுள்ளனர். நாம் மலர்கள் அனைத்தையுமே தீநாற்றமுடையன என்று கூறிடுவதில்லை; அவற்றில் தீநாற்றம் வீசுவதைத் 'தீநாற்றமுடையது' என்கிறோம், நாற்றமே வீசாததை 'நாற்றம் வீசாதது' என்கிறோம், நல்ல நாற்றம் வீசுவதை 'நன்னாற்ற முடையது' என்கிறோம். எடுத்துக்காட்டாகப் பீநாறிச்சங்கை 'தீநாற்றமுடையது' என்கிறோம், கனகாம்பரத்தை 'நாற்றமே வீசாதது' என்கிறோம், மல்லிகையை 'நன்னாற்றமுடையது' என்கிறோம். அது போலவே தான் சமயங்களைப் பற்றி ஆராய்ந்து கூறும் நாம், அவற்றிலுள்ள குறைபாடான இழுக்குடைக் கருத்துக்களைச் சுட்டிக் காட்டி அவைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். குறைபாடோ நிறைபாடோ அற்ற தேவையற்ற கருத்துக்களைப் பயன் படாதவை என்று ஒதுக்கி வைக்கிறோம்; நிறைபாடான தேவையான கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறோம். சமயக் கருத்துக்கள் அனைத்தும் அப்படியே நூற்றுக்கு நூறும் குறைபாடுடையன என்று கூறிவிடும் கருத்துக் குருடர் அல்லர் நாம். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்னும் வள்ளுவரின் பொன் மொழிக்கு ஏற்பதான் நாம் நமது பகுத்தறிவைப் பயன் படுத்திச் சமயத்துறை பற்றிய கருத்துக்களை ஆராய்ந்து வருகிறோம்.

உள்ளபடியே, மலர்கள் எல்லாவற்றையும் ஒரே தன்மையான என்று மதிப்பிடும் போக்கு, பெரும்பாலான சமய வாதிகளிடம் மட்டுமே இருப்பதைத் திருக்கூட்டத்தார் அறிதல் வேண்டும். மல்லிகையைப் போலவே, கனகாம்பரமும், பீநாறிச் சங்கும் நல்ல நறுமணத்தை வீசும் மலர்கள் ஆகும் என்று கூறிடும் போக்கைப் பெரும்பாலான சமய வாதிகள் தாம் விடாப் பிடியாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். தத்தம் சமயம் கூறிடும் கருத்துக்கள் அனைத்தும், அப்படியே நூற்றுக்கு நூறும் நன்மை பயக்கும் உண்மையான கருத்துக்கள் ஆகும் என்று தான் பெரும்பாலான சமயவாதிகள் பிதற்றி வருகின்றனர். மலர்கள் அனைத்தையும் ஒரே தன்மையானவாகக் காணும் பிற்போக்கில் சமயவாதிகள் தாம் கிடந்து உழல்கின்றனர்; உண்மையாகவே மலர்களைத் தரம் பிரித்துக் காணும்படி எல்லோரையும் வற்புறுத்திவருபவர்கள் பகுத்தறிவு வாதிகள் தாம்.

சமயங்கள் அறிவுக்கொத்த, நன்மை தரும், பேருண்மைகளை எடுத்துச் சொல்லுகின்றன என்றால், அப்படிப்பட்ட பேருண்மைகளை மாற்றவோ, எதிர்க்கவோ, அழிக்கவோ பகுத்தறிவு வாதிகள் ஒருகாலும் முற்பட்டதில்லை; முற்படுவதில்லை. அறிவு—அன்பு—அருள்—

அறம்—அடக்கம்—இனிமை—இரக்கம்—ஈகை உண்மை—உழைப்பு—ஊக்கம்—ஒப்புரவு—ஒழுக்கம்—கண்ணோட்டம்—கல்வி—கற்பு—காதல்—செய்ந்நன்றி—நட்பு—பண்பு—புகழ் பெருமை—மானம் ஆகியவை நல்ல முறையில் மக்களிடத்தே பூத்துக் குலுங்கவேண்டும் என்று சமயங்கள் கூறுகின்றன என்றால் அத்தகைய கருத்துக்களை எதிர்க்கவோ அழிக்கவோ பகுத்தறிவுவாதிகள் ஒருபோதும் முற்பட்டதில்லை! அதற்கு மாறாக அத்தகைய கருத்துக்களைப் பகுத்தறிவின் அடிப்படையில் பரப்பவே செய்கின்றனர். கள்குடித்தல், கொலைசெய்தல், பொய்சொல்லுதல், சூதாடுதல், களவுசெய்தல், துன்பம் இழைத்தல், இன்னா கூறல், கயமைபுரிதல், பிறனில்விழைதல், பெரியோரைப்பழித்தல், வெகுளுதல், வெருவந்தசெய்தல் போன்ற தீச்செயல்கள் அறவே அகற்றப்படவேண்டும் என்று சமயங்கள் கூறுகின்றன என்றால், அதுபோன்று கூறப் பகுத்தறிவுவாதிகள் மிக அக்கறையும் கவலையும் செலுத்தியே வருகின்றனர். அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்துவரும் பயன்தரக் கூடிய மக்களுக்கு முன்னேற்றம் அளிக்கக் கூடிய, எல்லாக் கருத்துக்களையும், அவைகளைச் சமயங்கள் கொண்டிருந்தாலும்சரி, கொள்ளாமலிருந்தாலும்சரி, அவற்றைப் பரப்புவதிலே பகுத்தறிவுவாதிகள் என்றென்றும் முன்னணியில் நிற்கவே செய்கின்றனர்.

கற்பனைக்கடவுளைத் தொழுதல்—பொய்ப் புராணங்களைப் புனைதல்—அவைகளை நம்புதல்—கற்பனைக் கடவுளுக்குச் சிலை அமைத்தல்—அதற்கு ஆற்றல் உண்டு என்று நம்புதல்—அதற்குக் கோயில் கட்டுதல்—அதற்குத் தேர் திருவிழாக்கள் நடத்துதல்—அதற்குத் தூப தீப நைவேத்தியங் காட்டுதல்—அதற்குச் சாம்பிராணிப் புகைபோடுதல்—அதற்குச் சூடம் எரித்தல்—அதற்குத் திருமணம் செய்வித்தல் —அதற்குப் பல மனைவிகளைக் கற்பித்தல்—அதற்குத் தாத்தா பாட்டி, அப்பா அம்மா, மாமாமாமி, அண்ணன் அக்காள், தம்பி தங்கை, மகன் மகள், பெயரன் பெயர்த்தி போன்ற பல்வேறு உறவினர்களை ஏற்படுத்துதல்—அதனை வேண்டிக்கொண்டால் அது அன்பு செலுத்தும் என்றல்—அதனை வேண்டிக்கொள்ளாவிட்டால் அது துன்பம் கொடுக்கும் என்றல்—மோட்சம் நரகம் உண்டு என்றல்—ஆணின் விலாவெலும்பிலிருந்து பெண் உருவாக்கப்பட்டாள் என்றல்—ஆண்டவன் ஆறுநாட்களில் உலகைப் படைத்து ஏழாம் நாளில் ஓய்வு பெற்றுக்கொண்டான் என்றல்—கொல்லும் உயிர் வகைகளையும் அவற்றிற்கு இரையாகும் உயிர்வகைகளையும் படைத்து ஆண்டவன் திருவிளையாடல் புரிகிறான் என்றல் — ஆண்டவன் அதிசயங்கள் புரிந்து தனக்கு வேண்டியவர்களை மட்டும் காப்பாற்றினான் என்றல் — தெய்வீகத்தால் எலும்பு பெண்ணுரு ஆக்கப்பட்டது, மறை கதவினைத் திறந்தது, ஆண்பனை பெண்பனை ஆயிற்று, ஏடு எதிர்நோக்கி நீந்திற்று, கல்லானை கரும்பு தின்றது, அப்பம் புடப்புட வளர்ந்துகொண்டேயிருந்தது, செத்தவர் மூன்றாம் நாள் பிழைத்தார், அமாவாசை இருட்டில் பிறை தோன்றிற்று, நேரே ஒரேநாள் இரவில் ஆண்டவனைப் பார்த்துவிட்டுப் பக்தர் திரும்பினார் என்பன போன்றவற்றைக் கூறல்—ஆராய்ச்சி செய்யாமல் சாஸ்திர சம்பிரதாய சடங்குகளை அப்படி ஏற்றுக்கொள்ளுதல்—விபூதி, பாவங்களைப் போக்கிப் புண்ணியந்தரும் என்றல்—மதச்சின்னங்களைத் தரித்தல் மோட்சத்திற்கு வழி என்றல்—வேதங்களில் கூறியவற்றையெல்லாம் அப்படியே நம்பவேண்டும் என்றல்-சமயத்தின் பெயரால் சொல்லப்படும் அத்துணையையும் நம்பவேண்டும் என்றல்—சமயத்தின் பெயரால் செய்யப்படும் அத்துணையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றல்- என்பன போன்ற அறியாமையின்பாற்பட்ட குருட்டுநம்பிக்கையும் மூடப்பழக்கவழக்கமும் நிறைந்த கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, அவைகளை ஒதுக்கித் தள்ளும்படி மக்களைக் கேட்டுக்கொள்ளவேண்டிய கடப்பாடு பகுத்தறிவுவாதிகளைச் சார்ந்ததாக இருக்கிறது. பகுத்தறிவுவாதிகள் இந்தக் கடமையைச் செய்யாமல் போவார்களேயானால், மக்களை அறியாமை மயக்கத்திலிருந்து விடுவிக்கமுடியாது. சமயங்களிலுள்ள குருட்டுநம்பிக்கைகளையும் மூடப்பழக்கவழக்கங்களையும் விளக்கிக்காட்டாமல், அவற்றிலுள்ள பேருண்மைகளை மட்டும் எடுத்துச் சொல்வது என்று முனைந்தால், மக்கள் சமயங்களிலுள்ள எல்லாக் கருத்துக்களுமே உண்மையானவைதாம் போலும் என்று எண்ணி மதிமயங்கிக்கிடக்க இடம் ஏற்படும். எனவேதான் மக்களுக்குப் பயன்படும் மாசற்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பொறுப்போடு, மக்கள் விட்டொழிக்கவேண்டிய கருத்துக்களைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி எச்சரிக்கை செய்யவேண்டிய பொறுப்பிலும் பகுத்தறிவுவாதிகள் இருந்துவருகிறார்கள்.

உலகில் சமயத் தலைவர்களாலும், சமயச் சார்பற்ற தலைவர்களாலும் எடுத்து மொழியப்பட்ட கருத்துக்களில் சீரியனவாகவும், தேவைப்படுவனவாகவும் விளங்கும் கருத்துக்களையெல்லாம் பொதுப்படையாகத்

திரட்டி, அவைகளை மக்களிடத்தில் பரப்பிடும் பணியினைப் பகுத்தறிவியக்கத்தினர் செய்து வருகின்றனர். எந்தெந்த சிறந்த கருத்துக்கள் சமயங்களில் ஊடுருவி நிற்கின்றன என்று பகுத்தறிவாளரால் கருதப்படுகின்றனவோ, அந்தச் சிறந்த கருத்துக்கள் பகுத்தறிவியக்கக் கொள்கைகளிலே தோய்ந்து கிடக்கவே செய்கின்றன. அவற்றிற்காகச் சமயக் கோலம் தாங்கி, சமயவழி நின்று, சமயத்தின்கண் ஊடுருவிப் பார்க்க வேண்டிய இன்றியமையாமை இல்லை.

காலத்துக்கும் அறிவாராய்ச்சிக்கும் ஒத்து வரக்கூடியனவாகச் சமயங்களில் இருக்கும் கருத்துக்கள் அவ்வளவும் பகுத்தறிவியக்கத்தில் இருக்கின்றன; ஆனால் பகுத்தறிவியக்கத்திலிருக்கும் அவ்வளவு கருத்துக்களும் சமயங்களில் இல்லை. ஆகவேதான், சமயவெறிகளை விட்டுவிட்டுப் பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்று நடக்க அருள்நெறித் திருக்கூட்டத்தார் முயலுவார்களேயானால், அது நாட்டுக்கும் அவர்களுக்கும் நன்மை தரும் என்று நாம் வலியுறுத்திக் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

* * *

வினா: "பலகட்சிக் கூட்டணியாளர்களுடைய உண்மையான விருப்பம் இந்திய யூனியனில் சேராமலிருப்பதுதான். இந்தக் கருத்தைப் பகிரங்கமாகச் சொல்ல அவர்கள் பயப்படுகின்றனர். தங்களுடைய உண்மையான கருத்தை வெளியிட வெட்கப்படுகின்றனர், தங்கள் கருத்தைப் பகிரங்கமாகப் பொதுமக்களிடம் சொல்ல அஞ்சும் கட்சிகள் தங்களை அரசியல் கட்சிகள் என்று சொல்லிக்கொள்வதற்கே தகுதியில்லை" என்று காமராசர் லயோலாக் கல்லூரியில் சொல்லியிருக்கிறாரே அதைப் பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: தோழர் காமராசர் அவர்கள் தம்மை ஒரு அரசியல்வாதி என்றோ, அரசியல் நாகரிகம் தெரிந்தவர் என்றோ, ஆளும் திறமை படைத்தவர் என்றோ, அரசியல் நிலைமைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவர் என்றோ, எதிர்க்கட்சிகள் என்ன சொல்லுகின்றன என்பதைக் கேட்டுப் புரிந்து சிந்தித்துத் தெளிவடையும் அறிவு உடையவர் என்றோ சொல்லிக்கொள்வதற்குச் சிறிதும் தகுதி படைத்தவர் அல்லர் என்பதை மேற்சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் கூற்றின் மூலம் உலகுக்குத் தெளிவு படுத்திவிட்டார்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், அந்த மாநிலத்தின் அரசியல் சூழ்நிலைகள் என்ன என்பதை அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு அறிவுச் சூன்யக்காரராக இருந்து, ஏதேதோ பொருத்தமில்லாத வகையில் உளறிக் கொட்டுவார் என்று யாரும் பொதுவாக எதிர்பார்க்கமாட்டார்கள். அப்படி ஒரு முதலமைச்சரைத் தமிழக மக்கள் எதிர்பார்க்கலாம் என்பதை நிலைநாட்டும் விதத்தில், தோழர் காமராசர் அவர்கள் சென்னை லயோலாக் கல்லூரியில் உளறிக் கொட்டியிருக்கிறார். ஒரு முதலமைச்சராக இருப்பவர் இப்படியெல்லாம் உளறலாமா என்பதுதான் வியப்புக்குரியதாகுமே ஒழிய, தோழர் காமராசர் அவர்கள் இப்படியெல்லாம் உளறுகிறார் என்பது வியப்புத் தருவது ஆகாது. ஏனெனில், அறிவுத் தெளிவைப் பொறுத்தவரையில் அவரிடம் அவ்வளவைத்தானே நாம் எதிர்பார்க்க இயலும்?

"பல கட்சி முன்னணியாரின் உண்மையான விருப்பம் இந்திய யூனியனில் சேராமலிருப்பதுதான். இந்தக் கருத்தைப் பகிரங்கமாகச் சொல்ல அவர்கள் பயப்படுகின்றனர்" என்று தோழர் காமராசர் அவர்கள் செப்பியிருப்பது சிறுவரும் எள்ளி நகையாடத்தக்கதாக இருக்கிறது. பைத்தியக்காரர்கள் பொருத்தமில்லாத வகையில் யாரும் கண்டுபிடிக்காததைத் தாம் கண்டுபிடித்துவிட்டது போலக்கூச்சலிடுவது இயல்பு. அத்தகையப் பைத்தியக்காரர்களைப்போல் தோழர் காமராசர் அவர்கள் கூட்டணியினரின் உண்மையான விருப்பத்தைக் கண்டுபிடித்துவிட்டவர் போலவும், அந்த விருப்பத்தைப் பகிரங்கமாகச் சொல்ல கூட்டணியினர் பயப்படுவதைப் போலவும் பைத்தியகாரத்தனமாகக் கற்பனை செய்துகொண்டு உளறியிருக்கிறார்.

கூட்டணியில் உறுப்பேற்றிருக்கும் முக்கியமான கட்சிகள்: (1) தமிழரசுக் கழகம், (2) கம்யூனிசுட்டுக் கட்சி, (3) சோசியலிசுட்டுக் கட்சி, (4) பிரசா சோசியலிசுட்டுக் கட்சி, (5) தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், (6) நீதிக்கட்சி, (7) திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவையாகும். இந்தக் கட்சிகளுக்கெல்லாம் தனித்தனிக் கொள்கைகளும்—குறிக்கோள்களும்—திட்டங்களும்—செயல் முறைகளும்—அமைப்பு முறைகளும் கொண்டு நடமாடி வருகின்றன என்பதை நாட்டுப் பெருங்குடிமக்கள் நன்கு உணர்வார்கள். ஆனால் இந்தக் கட்சிகள் மட்டுமல்லாமல், காங்கிரசுக் கட்சியும், திராவிடக் கழகமும் உள்பட எல்லாக் கட்சிகளும், மொழி அடிப்படையில் புதிய

மாநிலங்கள் உருவாக வேண்டும் என்பதையும், அந்தப்படிக்கு எல்லாத் தமிழ்ப் பகுதிகளையும் கொண்ட புதிய தமிழகம் தனி மாநிலமாக உருவாக வேண்டும் என்பதையும், ஆங்கிலேயர் வகுத்திருந்த சென்னை மாநிலம் போன்ற நான்கு மொழி, மூன்று மொழி, இரண்டு மொழி மாநிலங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக நிற்பன என்பதையும் வலியுறுத்தி வந்தன என்பது யாவரும் கண்கூடாக அறிந்த செய்தியாகும். இந்தியப் பேரரசின் போக்கு மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கைக்கும், எல்லாத் தமிழ்ப் பகுதிகளும் அடங்கிய தமிழகம் உருவாக வேண்டும் என்ற கோரிக்கைக்கும் மாறுபாடாகப் போகும் போது, அத்தகைய மாறுபாடான நிலைமை ஏற்படக் கூடாது என்ற எண்ணம் ஏறத்தாழ எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்பட்டது. இதுவரையில் பல கட்சிகளாலும் வலியுறுத்தபபட்டு வந்த கோரிக்கைகளைத் தமிழப் பெருங்குடி மக்களின் ஒரே குரலாக எழுப்பி காட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் மீது தான் கூட்டணி அமைக்கப்பட்டது எனபதையும் பலரும் அறிவர். தமிழ்நாட்டுக் காங்கிரசு, மேலிடக் கட்டளைக்கு ஏற்ப மாநில அமைப்பைப் பொறுத்துத் தன் கொள்கைகளை மாற்றிக்கொண்டுவிட்டதால், கூட்டணி அமைப்பை ஏற்க மறுத்துவிட்டது. திராவிடக்கழகம், கண்ணீர்த்துளிகள் இருக்கும் அணியில்தான் இருக்கக்கூடாது என்று கருதிய காரணத்தாலும், காமராசரின் 'கோபம்' வருமோ என்று எண்ணிய காரணத்தாலும் கூட்டணி அமைப்பை ஏற்க அதுவும் மறுத்துவிட்டது. இந்த இரண்டு கட்சிகளைத்தவிர, தமிழகத்திலுள்ள ஏனைய முக்கியமான கட்சிகளெல்லாம் கூட்டணியாக இணைந்து நின்று, முன்பு தனித்தனியாக வலியுறுத்திவந்த கோரிக்கைகளைச் சேர்ந்து வலியுறுத்தத் தொடங்கின. இந்த வரலாற்றைச் சாதாரண அரசியல் அறிவு படைத்த எவரும் நன்கு அறிவர்.

மொழி அடிப்படையில் புதிய தமிழ் மாநிலத்தை உருவாக்கவேண்டும் என்பதற்குத்தான் கூட்டணி அமைந்ததேதவிர, சுதந்தர சுயேச்சை தனித்தமிழ் நாட்டை உருவாக்க அல்ல என்பதை அறிந்துகொள்ள முடியாத அளவுக்குத் தோழர் காமராசர் ஏனோ கருத்துக் குருடராகிவிட்டார்! தமிழ் மாநிலம் (மாகாணம்) அமைப்பது என்பதுதான் கூட்டணியின் பொருளாகக் கொள்ளப்பட்டதே ஒழிய, தனித் தமிழ் நாட்டை அமைப்பது என்பதல்ல. 'தனித் தமிழ் நாட்டை' அமைப்பது என்பதை இப்பொழுது எந்த அரசியல் கட்சியும், தனிப்பட்ட முறையிலும் கூடக் கோரிக்கையாகக் கொண்டிருக்கவில்லை.

தமிழரசுக்கழகம் : "உரிமைக்கு எல்லை வேங்கடம்" என்று சொல்லித் தமிழ் மாநில அமைப்பையும், "உறவுக்கு எல்லை இமயம்" என்று சொல்லி இந்திய யூனியன் அமைப்பையும் பகிரங்கமாக ஆதரிப்பதைத் தன் கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

கம்யூனிசுட்டுக்கட்சி : "ஐக்கியத் தமிழகம் வாழ்க ! ஐக்கிய இந்தியா வாழ்க !" என்று பகிரங்கமாகச் சொல்லித் தன் கொள்கையை நிலைநாட்டியிருக்கிறது.

சோசியலிசுட்டுக்கட்சி: இந்தியா ஒரே இந்தியாவாக இருக்கவேண்டும் என்று பகிரங்கமாகப் பறைசாற்றி வருகிறது.

பிரசா சோசலிசுட்டுக்கட்சி: இந்தியா இனியும் துண்டாகப்படக்கூடாது என்று பகிரங்கமாகப் பேசிவருகிறது.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் : அகில இந்தியா சம்மேளனமாக இருந்து ஒரே இந்தியா கொள்கையைத்தான் இதுவரையில் பகிரங்கமாகக் கடைப்பிடித்து வருகிறது.

நீதிக்கட்சி : இந்தியா ஒன்றுகவே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வராவிட்டாலும், தனித்தமிழ்நாடு ஏற்படவேண்டும் என்பதை இறுதிவரையில் வலியுறுத்தவே செய்யவில்லை.

திராவிட முன்னேற்றக்கழகம் : இந்தியா பிரிவினை செய்யப்படவேண்டும் என்பதை பல்லாண்டு காலமாக வலியுறுத்தி வருகிறது. தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கும் மொழிவழித் தனித்தனி மாநிலங்களாகப் பிரிந்து, இனவழி குறைந்த அளவுத் திட்டத்திலே ஒன்றுபட்ட சுதந்திர சோசியலிச திராவிடக் குடியரசுக் கூட்டாட்சி ஏற்படவேண்டும் என்றுதான் இதுவரையில் முழக்கமிட்டு வருகிறது. தனித் தமிழ் நாடு அமையவேண்டும் என்பதை இப்பொழுது வலியுறுத்தவில்லை எனபதையும் தமிழ் மாநிலம் அமையவேண்டும் என்பதையும், தனித் திராவிடநாடு அமையவேண்டும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி வருகிறது.

இப்படிப்பட்ட கட்சிகள் ஒன்று சேர்ந்து அமைத்திருக்கிற கூட்டணியின் "உண்மையான விருப்பம்" இந்திய யூனியனிலிருந்து பிரிந்து தனித் தமிழ் நாடு அமைப்பதுதான் என்று பண்டித நேருவும், அவர் சொல்லி

விட்ட காரணத்தால் அவரை அப்படியே பின்பற்றும் தோழர் காமராசரும் கூறுகிறார்கள் என்றால், அவர்களின் அறியாமை இருந்தவாறு என்னே என்று கூறி எள்ளி நகையாட வேண்டியிருக்கிறது.

கூட்டணியில் இணைந்திருக்கிற கட்சிகளில் திராவிடநாட்டுப் பிரிவினையை ஓயாமல் ஒழியாமல் பகிரங்கமாகவும், வெட்கப்படாமலும் வலியுறுத்திவருவது திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும். இந்தக் கருத்தைக் கழகம் அர்த்தாலுக்கு முன்பும் சொல்லிற்று, அர்த்தாலுக்குப் பின்னும் வலியுறுத்தி வருகிறது. பயந்து இந்தக் கருத்தை மறைக்கவேண்டிய இன்றியமையாமை கழகத்திற்கு இதுவரையில் ஏற்பட்டதில்லை. அப்படியிருந்தும் "கருத்தைப் பகிரங்கமாகச் சொல்ல அவர்கள் பயப்படுகிறார்கள். தங்களுடைய கருத்தை வெளியிட வெட்கப்படுகிறார்கள்" என்று தோழர் காமராசர் அவர்கள் பிதற்றுகிறார் என்றால், அவரை 'முட்டாள்' என்பதா? அல்லது 'பைத்தியக்காரர்' என்பதா? அல்லது 'யோக்கியம் அற்றவர்' என்பதா? அல்லது பண்டித நேருவுக்குத் தாளம் போடும் எடுபிடி என்பதா? நாட்டுப் பிரிவினைக் கொள்கையை மற்றக் கட்சிக்காரர்கள் கொள்ளவில்லை, எனவே அதைப் பற்றி அவர்கள் வலியுறுத்தவில்லை. இதில் பயப்படுவதற்கோ அல்லது வெட்கப்படுவதற்கோ என்ன இருக்கிறது?

மொழிவழி மாநிலத்தைப் பற்றியும், புதிய தமிழகத்தைப் பற்றியும், தட்சிணப்பிரதேசத்தைப் பற்றியும் தங்கள் கருத்து என்ன என்பதைக் கூட்டணியில் சேர்ந்துள்ள எல்லாக் கட்சிகளும் திட்ட வட்டமாகப் பகிரங்கமாகச் சொல்லிவிட்டார்கள். அந்தக் கருத்தை வெளியிடுவதில் கூட்டணிக் கட்சிகளுக்குக் குறிப்பாகத் தி. மு. க. வுக்கு அச்சம் சிறிதும் ஏற்படவில்லை; ஏற்பட வேண்டிய இன்றியமையாமையும் இல்லை. ஆனால் உள்ளபடியே மொழிவழி மாநிலம் பற்றியும், தட்சிணப் பிரதேசம் பற்றியும் முன்னுக்குப்பின் முரண்பட்ட வகையில் நாளைக்கொரு எண்ணமாகவும், இடத்திற்கொரு கருத்தாகவும் சொல்லி தம்கருத்து இன்னது தான் என்பதைத் திட்ட வட்டமாகவும், தெளிவாகவும், பகிரங்கமாகவும் சொல்ல முடியாமல் அஞ்சி அஞ்சி வெட்கப்பட்டுக் கொண்டு வாழும் கடைந்தெடுத்த கோழையுள்ளம் படைத்தவர் ஒருவர் உண்டென்றால் அவர் தான் தோழர் காமராசர் ஆவார் என்று சாலையில் திரியும் சாதாரண மனிதனும் கூறுவானே!

அர்த்தாலுக்கு முன்பும் சரி, அர்த்தாலுக்கு பின்பும் சரி பொதுமக்களைக் கூட்டிப் பொதுமக்களிடத்தில் கருத்துக்களைக் கூறிடும் அஞ்சாப் பணியினைக் கூட்டணிக் கட்சிகள் தாம் செய்து வருகின்றன. ஆனால் தோழர் காமராசர் தான் பொதுமக்களைக் கூட்டி வைத்துப் பொதுமக்களிடத்தில் தம் கருத்துக்களைக்கூற அஞ்சிப், பத்திரிகை நிருபர்களையும், சைதாப்பேட்டை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களையும், லயோலாக் கல்லூரி மாணவர்களையும் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வைத்து, அவர்களிடம் ஏதேதோ உளறிக் கொட்டிப் பார்க்கிறார்.

கூட்டணியின் தலைவர் தோழர் பி. டி. இராசன் அவர்கள் "அர்த்தாலின் நோக்கம் தமிழ் நாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்பதல்ல" என்று தான் அறிக்கை வெளியிட்டிருந்தாரே யல்லாமல், கூட்டணியில் சேர்ந்துள்ள எந்தக் கட்சியின் நோக்கமும் பிரிவினை கோருவது அல்ல" என்று குறிப்பிடவில்லை. பிரிவினைக் கோருகிற கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது "திராவிடநாட்டுப் பிரிவினை"யைக் கோருகிறதேயொழிய "தமிழ்நாட்டுப் பிரிவினை"யை அல்ல என்பதைத் தோழர் காமராசரும், அவரது குரு, பண்டித நேருவும் ஏனோ உணர மறந்து விட்டார்கள்? "பிரிவினை கோருகிற திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியில் இருக்கிறது" என்று கூட்டணித் தலைவர் புதிதாகச் சொல்லி உலகுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசிய நிலை என்ன இருக்கிறது? கூட்டணி அமைக்கப்பட்டபோதே, பிரிவினை கோருகிற தி. மு. கழகமும் அதில் இணைந்திருக்கிறது என்பது நாடு அறிந்த ஒன்று ஆயிற்றே! "பிரிவினை கோரும் சக்தி எதுவும் முன்னணியில் இல்லை" என்று தோழர் பி. டி. இராசன் அவர்கள் கூறவில்லையே! "அர்த்தாலின் நோக்கம் தனித் தமிழ்நாட்டைப் பிரிப்பது அல்ல" என்று தான் அவர் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டார். இது எந்த வகையில் தவறானதாகவோ, அச்சத்தைக் காட்டுவதாகவோ, வெட்கத்தைக் காட்டுவதாகவோ ஆகும்? திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடநாட்டுப் பிரிவினையைக் கோரும் கட்சி தான் என்பது எங்கும், எப்பொழுதும் தெளிவு படுத்தப் பட்டுத்தான் வருகின்றது. அந்த நிலைமை எந்த வகையிலும் மறைத்துக் காட்டப் படவில்லையே!

பண்டித நேரு முட்டாள் தனமாகக் கூறினார், அதற்குத் தோழர் காமராசர் முட்டாள் தனமாகத் தாளம் போட்டு வருகிறார் என்பது தான் தோழர் காமராசர் கூற்றிலிருந்து பொது மக்கள் அறிந்து கொள்ளவேண்டியதாகும்.

திராவிடத்தின் வரலாற்றிலே ஓர் திருப்பு முனை!

திராவிடம் வளம்பெற—திராவிடர் நலம்பெற—திட்டங்கள் வகுக்க,

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு!

மே 17, 18, 19, 20-இல்

திருச்சியில்

நடைபெறும்

அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம்பற்றி விளக்கந்தரும்

கவர்ச்சிமிக்க கண்காட்சிகள்!

எழுச்சிதரும் இன்னிசை அரங்குகள்!

உணர்ச்சி ஊட்டும் நாடக நிகழ்ச்சிகள்!

புரட்சி பயக்கும் திட்டங்கள்!

சிறப்புமிக்க சொற்பொழிவுகள்!

ஆகிய எல்லாம் சிந்தனைக்கு அரிய விருந்தூட்டும்!

அனைவரும் திரண்டு வாரீர்!

—வரவேற்புக்குழு.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

“மன்றம்” அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1) ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.